சாத்தானின் ஆரம்பமும் முடிவும்

"சாத்தானின் சபையில் இருந்து வெளியேறிய
சகோ. இம்மானுவேல் ஆமோஸ்
என்பவரின் அனுபவ சாட்சி"

ஆசிரியர் பாஸ்டர் Y.K.P. ஹென்றி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Praise the Lord

சாத்தானின் ஆரம்பமும் முடிவும்

[சாத்தானின் சபையிலிருந்து விடுதலையான சகோ. இம்மானுவேல் ஆமோசின் பயங்கரமான அனுபவ சாட்சியும்].

God Bless you.

ஆசிரியர்

பாஸ்டர் Y.K.P. ஹென்றி

வெளியிடுவோர்

தேவதரிசன ஊழியங்கள்

14, அகஸ்தியர் தெரு, பாளையங்கோட்டை – 627002.

☎ : 0091 (0462) 2560124, Mobile : 94434 46460

Email: godsvisionministries@gmail.com

Pr. P. G. P

பொருளடக்கம்

✍ ஆசிரியர்

1. பரலோகத்தில் படைக்கப்பட்ட தூதர்கள்

2. ஏதேனில் இருந்த தூதர்கள்.

3. அகாதமான பாதாளத்தில் தள்ளூண்டு போன தூதர்கள்.

4. வானமண்டலத்தில் இருக்கும் பொல்லாத ஆவிகளின் சேனைகள்.

5. பூமியில் சாத்தானும் அவன் தூதர்களும் தள்ளப்படுதல்.

6. பாதாளத்தில் சாத்தானும் அவன் கூட்டத்தாரும் தள்ளி அடைக்கப்படுதல்.

7. பூமியில் சாத்தானும் அவன் சேனையும் கொஞ்சகாலம் இருக்க பாதாளத்திலிருந்து விடுதலை அடைதல்.

8. நரகத்தில் சாத்தானும் அவன் கூட்டமும் தள்ளப்படுதல்.

- சாத்தானின் ஆரம்பமும் முடிவும் அதைப் பற்றிய வரைபடம்.
- "சாத்தானின் சபை என்ற பொல்லாத கூட்டத்திலிருந்து விடுதலையான சகோதரர் இம் மானுவேல் ஆமோஸ் என்பவரின் அனுபவ சாட்சி".

ஆசிரியர் உரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இந்த புத்தகத்தின் மூலம் உங்களுக்கு என் அன்பை தெரிவித்து மகிழ்ச்சி அடைகிறேன். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நான் சாத்தானின் பொல்லாத கூட்டத்தாரின் சபையைக் குறித்தும் அவர்களின் செய்கைகளைக் குறித்தும் சகோதரர் இம்மானுவேல் ஆமோஸ் என்பவருடைய சாட்சியை வாசித்தேன். அதனால் சாத்தானின் துவக்கம் முதல் முடிவு வரை உள்ள செய்தியை வேத வசன ஆதாரங்களோடு எழுத ஆவல் கொண்டு இப்புத்தகத்தை உங்கள் கைகளில் கொடுத்திருக்கிறேன். இப்புத்தகத்தின் கடைசி பகுதியில் சகோதரர் இம்மானுவேல் ஆமோஸ் என்பவரின் சாட்சியையும் வெளியிட்டுள்ளேன். தூதர்களைப் பற்றிய விரிவான செய்தியை தூதர்கள் (தூதர்களின் கால விளக்கம்) என்ற எமது புத்தகத்தை வாங்கி படியுங்கள். ஜெபத்தோடு அடிக்கடி இப்புத்தகத்தை படித்து பயனடையுங்கள். கர்த்தர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,

பாஸ்டர் Y.K.P. ஹென்றி

1. பரலோகத்தில் படைக்கப்பட்ட தூதர்கள்

தேவன் அநாதியாய் இருந்தார். அவர் தமது சித்தப்படி தூதர்களைப் படைத்தார். தூதர்கள் பரலோகத்தில் படைக்கப்பட்டபடியால் அவர்களுக்கு பரம சேனைகள் என்று பெயர். 1 இராஜாக்கள் 22:19; ஏசாயா 40:26 லூக் 2:13. தேவன் தூதர்களை விசித்திரமாகவும், முத்திரை மோதிரமாகவும், ஞானமுள்ளவர்களாகவும், பூரண அழகுள்ளவர்களாகவும், பொன்னும் இரத்தினக் கற்களும் சரீரத்தில் மூடி இருக்கத்தக்கதாகவும், மேளவாத்தியங்களும், நாதசுரங்களும் அவர்கள் சரீரத்தில் அமைந்திருக்கத்தக்கதாகவும் படைத்தார். எசே 28:12,13 அநாதிகாலத்தில் வானதி வானங்கள் மேலுள்ள பரலோக இராஜ்யம்தான் இருந்தது. வானாதி வானங்களுக்கு கீழ் ஒன்றும் படைக்கப்படவில்லை. ஆகவே தேவ தூதர்கள் படைக்கப்பட்ட இடம் பரலோகம். (மேலும் அறிய எமது "அநாதி தேவன்" என்ற நூலை வாங்கி வாசியுங்கள்).

2. ஏதேனில் இருந்த தூதர்கள்

தேவன் பரலோகத்தில் படைத்த தூதர்களை பூமியில் ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தார். "நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனின் இருநதவன்" என்று எசே 28:13ல் வாசிக்கிறோம். ஏதேன் என்பது ஆதாம் ஏவாள் இருந்த ஏதேன் அல்ல. தூதர்களைப் படைத்த தேவன் பின்பு வானாதி வானத்தின் கீழ் ஆதியில் தூதர்களின் காலத்தில் வானத்தையும் பூமியையும் படைத்தார். ஆதி 1:1 தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தி, அதற்கு அளவு குறித்து, அதின் மேல் நூல் போட்டு, தண்ணீர்கள் மேல் பூமியை ஆதாரப்படுத்தின போது விடியற்காலத்து நட்சத்திரங்களாகிய தேவ புத்திரரான தேவ தூதர்கள் கெம்பீரித்து பாடினார்கள் என்று தேவன் யோபு என்ற பக்தனோடு பேசி இருக்கிறார். யோபு 38: 4-7 எனவே தூதர்கள் படைக்கப்பட்ட

பின்புதான் பூமி படைக்கப்பட்டது என அறிகிறோம். இந்த பூமியில்தான் தேவன் "ஏதேன் தோட்டம்" என்ற பெரிய மாளிகையை அக்கினிமயமான இரத்தினக் கற்களால் உண்டு பண்ணி அங்கே தேவன் தூதர்களை வைத்தார் என்று எசே 28:13-14ல் கூறப்பட்டுள்ளது. "நான் வானத்துக்கு ஏறுவேன்" என்று அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியாகிய தூதன் கூறியதால் அவன் இருந்த இடம் வானத்துக்கு கீழே என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். ஏசா 14:13 பூமி படைக்கப்பட்ட காலத்தில் வானத்தின் கீழே பூமியைத் தவிர வேறு ஒரு இடமும் படைக்கப்படவில்லை. யூதா 1:6ல் கூறப்பட்டபடி தூதர்களுக்கு வாசஸ்தலம் இருந்தது. அந்த வாசஸ்தலம்தான் தூதர் காலத்தில் பூமியில் உண்டாக்கப்பட்ட ஏதேன்.

3. அகாதமான பாதாளத்தில் தள்ளுண்டு போன தூதர்கள்

தேவன் தூதர்களை பரலோகத்தில் படைத்து ஏதேனில் வைத்தார் என அறிந்து கொண்டோம். ஏதேனில் இருந்த தூதர்கள் தேவனுடைய வாசஸ்தலமாகிய வடபுறத்தில் உள்ள ஆராதனைக் கூட்ட பர்வதமாகிய சீயோனுக்கு சென்று ஆராதனை செய்யும்படி நியமிக்கப்பட்டார்கள். தேவ தூதர்கள் கோடான கோடியான திரள் கூட்டம் பேர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். இவர்களில் கேரூப் கூட்டம், மிகாவேல் கூட்டம், காபிரியேல் கூட்டம் என்று மூன்று முக்கிய கூட்டங்கள் உண்டு. மிகாவேல், காபிரியேலைப் பற்றி வேதம் இவர்கள் அதிபதிகள் என்று கூறுகிறது. தானி 10:13,21 ஆகவே இவர்களுக்கு ஒரு பெரிய சேனைகளான திரள்கூட்டம் உண்டு என்பதை திட்டவட்டமாக அறிந்து கொள்ளலாம். தேவன் கேரூப்பை விசேஷமாக அபிஷேகம் பண்ணினார். "நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்" என்று எசே 28:14ல் எழுதப்பட்டுள்ளது. "அபிஷேகம்" என்றால் அதிகாரத்தைக் குறிக்கிறது. தேவன் எல்லாரிலும் மிகவும் பெரிய அதிகாரத்தை கேரூப்பிற்கு கொடுத்திருந்தார். தேவ தூதர்கள்

எல்லாரையும் தேவனை ஆராதிக்க வழிநடத்துகிறவனாக இவன் இருந்தான். சில காலம் சென்ற போது கேரூப் அநியாயம் செய்தான். எசே 28:15 அந்த அநியாயம் என்னவென்றால் "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களில் உள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்றும் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என்ற கேரூப் "பெருமை" என்ற அநியாத்தை அறிந்த தேவன் அவனையும் அவன் கூட்டத்தாரையும் வானத்திலிருந்து தரையில் விழ வெட்டித் தள்ளினார். ஏசா 14:12 இவ்வாறு தள்ளப்பட்ட கூட்டம் என்றும், லூசிபரின் கூட்டம் என்றும்: வலுசர்பத்தின் கூட்டம் என்றும், அழைக்கப்படுகிறது. இந்த பொல்லாத பெருமை பிடித்த கூட்டத்தார் தள்ளப்பட்ட இடம்தான் ஏசா 14:15ல் எழுதப்பட்டுள்ள அகாதமான பாதாளம். இந்த அகாதமான பாதாளம் எங்குள்ளது என்றால் முதலில் தேவதூதர்கள் ஏதேனில் இருந்த இந்த பூமிக்குள்தான் இருக்கிறது. எண் 16: 30-33.

தங்கள் ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல் பாவம் செய்த தூதர்கள் பாதாளத்தில் தள்ளப்பட்டார்கள் என்று அறிந்தோம். 2 பேதுரு 2:4 யூதா 1:6 தற்காலத்திலும் மனிதர்கள் தேவனுக்கு கீழ்படியாமல் பாவ வாழ்க்கையில் வாழ்ந்து மரித்தால் அக்கினி ஜூவாலித்து எரிகிற பாதாளம்தான் கிடைக்கும். லூக் 16:23 பூமியின் மேல் வாழ்ந்த போது இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமலும் பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளாமலும் மரித்தபடியால் பாதாளத்தில் இன்றும் அலறிக் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யா தேசத்தில் சைபீரியாவில் விஞ்ஞானிகள் எந்திரங்களைக் கொண்டு 9மைல் ஆழம் துளையிட்ட போது பூமிக்குள் இருக்கும் பாதாளத்தில் மனிதர்கள் அலறுகிற பயங்கரமான அலறல் சத்தத்தைக் கேட்டு ஒலிநாடாவில் பதிவு செய்துள்ளார்கள். (ஒலிநாடா தேவையானால் எங்களுக்கு எழுதுங்கள்).

மேலும் தேவன் பாவம் செய்த தூதர்களைப் பூமியில் தள்ளின போது பூமி தத்தளித்தது என்றும் ராஜ்ஜியங்கள் அதிர்ந்தது என்றும் ஏசா 14:15-17ல் கூறப்பட்டுள்ளது. தூதர் காலத்தில் தேவன் பூமியை ஒழுங்காக உண்டாக்கினார் என்று யோபு 38: 4-7ல் அறிந்தோம். தேவனால் ஒழுங்காக படைக்கப்பட்ட பூமியானது எப்படி ஒழுங்கின்மையாகவும், வெறுமையாகவும், இருளாகவும், தண்ணீருக்குள் மூழ்கிய நிலையிலும் மாறிப் போனதென்றால் தேவனுக்கும் பாவம் செய்த தூதர்களுக்கும் உண்டான யுத்தத்தின் காரணமாக இவ்வித நிலையில் ஆனது என அறிந்து கொள்ளலாம். தற்காலத்திலும் மனிதருக்குள் யுத்தம் உண்டாகும் போது தேசத்தில் உண்டாகிற அழிவு பயங்கரமாக இருக்கிறது போல அக்காலத்திலும் நடந்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

4. வானமண்டலத்தில் இருக்கும் பொல்லாத ஆவிகளின் சேனைகள். (பாவம் செய்த தூதர்கள்).

தேவன், பாவம் செய்த பொல்லாத ஆவிகளின் சேனைகளை அகாதமான பாதாளத்தில் தள்ளி விட்டார் என்று தெரிந்து கொண்டோம். பவுல் எபேசியருக்கு நிருபம் எழுதின போது வானமண்டலத்தில் பொல்லாத ஆவிகளான சாத்தான் கூட்டம் இருப்பதாக எழுதி உள்ளார். எபே 6:12 இந்த பொல்லாத ஆவிகளின் சேனைகள் வானமண்டலத்திற்கு எப்பொழுது சென்றது என்றால் தேவன் சீர்திருத்த காலத்தின் முதல் நாளில் வெளிச்சத்தையும், இரண்டாம் நாளில் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவையும் உண்டு பண்ணின போது (ஆதி 1:3-8) அகாதமான பாதாளத்தில் தள்ளுண்டு போன இந்த பொல்லாத ஆவிகளான சாத்தான் கூட்டம் ஆகாய விரிவு என்ற வானமண்டலத்திற்கு வந்தது. தற்காலத்திலும் இவை வானமண்டலத்தில் இருந்து கொண்டு பூமியில் வந்த ஆதாம் ஏவாளை ஏமாற்றி வஞ்சித்து பாவம் செய்யப் பண்ண பூமிக்கும்: பாவம் செய்து மரித்த பாவிகளான மனிதர்களை பாதாளத்திற்கு

கொண்டு செல்ல பாதாளத்திற்கும் சென்று வரும் சாத்தியம் இவைகளுககு உண்டு. சீர்திருத்த காலத்தில் ஆகாய விரிவு என்ற வானம் சிருஷ்டிக்கப்பட்டது முதல் இந்த கிருபையின் கால முடிவில் சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்காக வானத்தில் நடக்கும் யுத்தம் வுரை பொல்லாத அசுத்த ஆவிகளின் இருப்பிடம் வானமண்டலம். வெளி 12:7-9.

5. பூமியில் சாத்தானும் அவன் தூதர்களும் தள்ளப்படுதல்.

தேவன் சபையை எடுத்துக் கொள்ளும் பொழுது ஆகாயவிரிவு என்ற வானமண்டலங்கள் வழியாக எடுத்துக் கொள்ளுகிறார். 1தெச 4:16-17 அப்பொழுது பரிசுத்தவான்களிடம் வலுசர்ப்பமும் அவன் தூதர்களும் யுத்தம் செய்யாதிருக்க மிகாவேலையும் அவனைச்சேர்ந்த தூதர்களையும் வலுசர்ப்பமாகிய சாத்தான் என்னும் பிசாசோடு தூதர்களையும் யுத்தம் செய்ய அனுப்புவார். வெளி 12:7-12 வரை உள்ள வசனங்களில் வானத்திலே யுத்தமுண்டாயிற்று: மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும். சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது. அப்பொழுது அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது: இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும்

பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களி கூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங் கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக் கேட்டேன்."

மேற்கூறப்பட்ட வசனங்களின்படி பூமியிலே சாத்தானின் கூட்டம் தள்ளப்படும் போது சபை எடுத்துக் கொள்ளப்படும். பின்பு உலகில் அந்திக் கிறிஸ்துவின் கால உபத்திரவம் உண்டாகும். அதைக் குறித்தே உலகில் உள்ளவர்களுக்கு ஆபத்து வரும் என்று எழுதப்பட்டுள்ளது. வெளி 12:12 பூமியிலே தள்ளப்பட்ட சாத்தானின் கூட்டம் அந்திக்கிறிஸ்துவாகிய மிருகத்திற்கு சகல அதிகாரத்தையும் கொடுக்கும். வெளி 13:4,7.

அப்பொழுது அந்தி கிறிஸ்து 666 முத்திரையை தரித்திராத ஜனங்களை உபத்திரவப்படுத்துவான். வெளி 13:10-18 கிருபையின் கால முடிவில் முதல் தரமான பரிசுத்தவான்களை தேவன் எடுத்துக் கொள்ளும் போது, எடுத்துக் கொள்ளப்படாமல் கைவிடப்பட்டுப் போன தேவனுடைய பிள்ளைகள் இரத்தசாட்சியாக மரித்தால் நித்திய ஜீவனை அடைவார்கள். இயேசுவை மறுதலித்தால் நித்திய நரகத்தை அடைவார்கள். ஆகவே தேவனுடைய பிள்ளைகள் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் தப்பி மனுஷகுமாரன் முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படும்படி எப்பொழுதும் விழித்திருந்து ஜெபித்து பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டும் லூக் 21:36 வானத்தில் இருந்து தள்ளப்பட்ட சாத்தானும் அவன் கூட்டமும் அந்திக்கிறிஸ்துவின் காலம் முடியும் மட்டும் 7 வருடங்கள் தங்கள் பொல்லாத கிரியைகளை செய்து வருவது இந்த பூமியில்தான்.

6. பாதாளத்தில் சாத்தானும் அவன் கூட்டத்தாரும் தள்ளி அடைக்கப்படுதல்.

இயேசு தேவன் தமது பரிசுத்தவான்களோடும் தூதர்களோடும் மிகுந்த மகிமை உள்ளவராகவும், வல்லமையுள்ளவராகவும் வருவார். மத் 24:30 சகரி 14:4,5 எருசலேமில் இருக்கும் ஒலிவ மலையில் வந்திறங்குவார். அப்பொழுது அர்மகெதோன் என்னும் இடத்தில் வலுசர்ப்பமான பிசாசு என்னும் சாத்தான் கூட்டிச் சேர்த்த ஜனங்களோடும், அந்திக்கிறிஸ்துவோடும், சாத்தானோடும் இயேசு தேவன் யுத்தம் செய்வார். வெளி 16:16, 19:14-21, 20:1-2 அப்பொழுது இயேசு தேவனுடைய வாயின் பட்டயத்தால் புறஜாதிகள் அழிக்கப்படுவார்கள். பின்பு மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவும் பிடிக்கப்படுவான். இவர்கள் கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலில் உயிரோடே தள்ளப்படுவார்கள். வெளி 19:19-20 பின்பு ஒரு தூதன் பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை பிடித்து அதை ஆயிரம் வருஷமளவும் கட்டி வைத்து அந்த ஆயிர வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளி அடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான். வெளி 20:1-2 இவ்வாறு பாதாளத்தில் தள்ளப்பட்ட சாத்தான் ஆயிர வருட அரசாட்சி முடியும் மட்டும் அவனுடைய இருப்பிடம் பாதாளமாகவே இருக்கும்.

7. பூமியில் சாத்தானும் அவன் சேனையும் கொஞ்ச காலம் இருக்க பாதாளத்திலிருந்து விடுதலை அடைதல்.

இயேசுகிறிஸ்துவினுடைய ஆயிரவருட அரசாட்சி முடிந்ததும் வெளி 20:3-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டபடியே சாத்தான் கொஞ்ச காலம் விடுதலைக்காக கட்டவிழ்த்து விடப்படுவான். அவன் பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள

ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும் மோசம் போக்கும்படிக்கு அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும் அவர்கள் பூமி எங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும் பிரியமான நகரமாகிய எருசலேமையும் வளைந்து கொள்வார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போடும். வெளி 20:8-9 இவ்விதமாக ஆயிர வருட அரசாட்சியில் பிறந்த ஒரு கூட்ட ஜனங்களை மோசம் போக்கும்படி கொஞ்ச காலம் சாத்தானின் கூட்டம் பூமியில் இருக்கும்.

8. நரகத்தில் சாத்தானும் அவன் கூட்டமும் தள்ளப்படுதல்.

கோகு மாகோகு என்ற 5ம் உலக மகாயுத்தம் முடியும் போது ஜனங்களை மோசம் போக்கின பிசாசானவன் மிருகமும், கள்ள தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். வெளி 20:10 இவ்வாறு நித்திய நித்திய காலமாக சாத்தானும் அவன் தூதர்களும் நரகத்தில் வேதனையை அனுபவிப்பார்கள். இதுவே சாத்தானுக்கும் அவன் கூட்டத்தாருக்குமுள்ள முடிவு.

இதை வாசிக்கும் அன்பானவர்களே தேவன் இயேசு பூமியில் உள்ள ஜனங்களை நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயந்தீர்க்கும் பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, “சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்“ என்பார். மத் 25:41 இவ்வசனத்தில் நரகம் பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது மனிதனுக்காக அல்ல ஆனால் இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் பாவத்தில் ஜீவித்தால் “பாவத்தின் சம்பளம்

மரணம்“ இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகம். ஆகவே இன்றே மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ளுங்கள். இயேசுவை (கர்த்தரை) ஏற்றுக் கொண்ட அருமையானவர்களே! உங்கள் ஜீவியத்தை மரணபரியந்தம் உண்மையாக காத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது ஜீவகிரீடத்தை பெறுவீர்கள். வெளி 2:10 அல்லது அறிந்தும் அதன்படி செய்யாதவர்களுக்கு அதிக அடி அதிக ஆக்கினை என்பதை மறந்து போக வேண்டாம் யாக். 3:1.

இப்புத்தகத்தை வாசித்து உணர்வடைந்த உங்களை கர்த்தர் இயேசு ஆசீர்வதிப்பாராக! இச்செய்தியின் பின்னால் உள்ள சகோதரர் இம்மானுவேல் ஆமோஸ் என்பவரின் சாட்சியை கவனமாக கருத்தாக ஒருமனமாக படியுங்கள்.

சகோதரர் இம்மானுவேல் ஆமோஸின் சாட்சி

பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலேயே அவருக்கு காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையும் உமக்குத் தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான் (லூக்கா 4:5-7)

சாத்தானின் கோரப் பிடியிலிருந்து வலுக்கட்டாயமாக பிடுங்கப்பட்டதோர் 'ஏழை ஆத்துமாவின் அனுபவ சாட்சி',

எனது இளமை வாழ்வின் தாங்கொங்கொண்ணா துயரங்கள்

எனது வாழ்க்கை இருண்ட கண்டமான ஆப்பிரிக்கா கண்டத்தின் நைஜீரியா நாட்டிலுள்ள அமரி இரிக்பு என்ற கிராமத்தில் ஆரம்பமாகின்றது. எனது தாய் தந்தையர் ஐசுவரியவான்களின் பட்டியலில் இடம் பெறவில்லையாயினும் எனது தாத்தா விட்டுச் சென்ற 42 ஹெக்டர் பெரும் நிலப்பரப்புக்கு அவர்கள் சுதந்திரவாளியானார்கள். அந்த ஆசீர்வாதமானது மாபெரும் துன்பத்தைத்தான் எங்களது குடும்பத்துக்கு கொண்டு வந்தாக அமைந்தது. எனது தகப்பனார் எனது நெருங்கிய உறவினர்களாலும், தூரத்து சொந்தக்காரர்களாலும் காரணமில்லாமல் அதிகமாக பகைக்கப்பட்டார். அதினுடைய காரணம் என்னவென்று எனக்கு தெரியாதபோதிலும் எனது தாத்தா வழியில் அவருக்கு கிடைத்த திரண்ட சொத்து அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

ஆரம்ப காலத்தில் நாங்கள் குடும்பமாக மிகவும் மனமகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம். எனது பெற்றோருக்கு அன்பு மார்க்கரெட், இம்மானுவேல், சின்யீரி என்று நாங்கள் நான்கு

பிள்ளைகள். முதல் 2 பெண் மக்களுக்குப் பின்னர் ஆண் மகவாகிய என்னைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எனது பெற்றோர் 14 நீண்ட ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியதானது எனது தாய் தந்தையருக்கு நான் ஒருவன் மாத்திரமே ஆண் மகனானேன். மற்ற மூவரும் பெண்களே. எனக்குப் பின்னர் கடைசியாக சின்யீரி என்ற எனது தங்கை பிறந்தாள். அவளுடைய பிறப்பு எங்கள் குடும்பத்தில் மிகுந்த குதூகலத்தை கொண்டு வந்தது. ஆனால் அந்த குதூகலம் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. எங்கள் குடும்பத்தை ஆசை ஆவலாககட்டி எழுப்பிக் கொண்டு வந்தவருமான எனது அருமைத் தாயார் திடீரென மரணம் அடைந்தார்கள். மற்றவர்கள் வைத்த பில்லிசூனியம் காரணமாக அவர்கள் மாண்டு போனார்கள் என்று எங்கள் கிராமத்தில் பேசிக் கொள்ளப்பட்டது. என் அருமைத் தாயார் இறந்த 4 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் எனது அன்புத் தந்தையும் மரித்தார்கள் ஆப்பிரிக்காவில் மிகவும் பிரபல்யமாக கருதப்படும் ஜூ ஜூ என்ற மந்திரவாதம் அவருக்கு எதிராக செய்யப்பட்டதால் அவர் மரித்தார்.

எனது பெற்றோர் இறந்த 2 ஆண்டு காலத்திற்குப் பின்னர் எனது மூத்த சகோதரி அன்பு சற்றும் எதிர்பாராதவிதமாக திடீரென காணாமலே போய்விட்டார்கள். அடுத்த எனது இரண்டாம் சகோதரி மார்க்கரெட் மனநிலை பாதிப்புக்குள்ளானார்கள். இப்படியாக ஒரு கண்ணியமும், தாழ்மையுமுள்ள சந்தோஷமான கிறிஸ்தவ குடும்பத்துக்கு கொடுந்துயரங்கள் சங்கிலி கோர்வையாக வந்து கொண்டே யிருந்தன. எனது தங்கை சின்யீரியும் நானும் எனது தாத்தா (தாயாரின் தகப்பனார்) வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். நான் அந்த ஊரிலுள்ள ஆரம்ப பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 3 ஆம் வகுப்பு வரை படித்தேன். எனது தாத்தாவுடைய பொருளாதார பிரச்சினை நிமித்தமாக அந்த வகுப்புடனேயே எனது படிப்பு நின்று போயிற்று. அதின் பின்னர் எனது தாத்தா, பாட்டியும் கூட

மரித்துப் போனார்கள். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக சீக்கிரமாக மரணமடைந்த பின்னர் எனது தங்கை சின்யீரியை இனம் தெரியாத எனது சொந்தக்காரர் ஒருவர் தத்து எடுத்து வளர்க்க முற்பட்டு அழைத்துச் சென்றார்கள். அதற்கப்பால் அவள் எங்கே இருக்கின்றாள்? எப்படி இருக்கின்றாள்? அவள் காரியம் என்ன? என்ற எந்த ஒரு தகவலும், அடிச்சுவடுமே தெரியாமல் அப்படியே போய்விட்டாள்.

இறுதியாக நான் மட்டும் தனியனாக எனது பெற்றோருடைய காலியான வீட்டிற்கு வந்து சேர்ந்து அங்கு தனிமையாக வாழவேண்டிய ஒரு நிர்ப்பந்தமான நிலைக்கு தள்ளப்பட்டேன். அப்பொழுது எனது வயது 13 மாத்திரமே. தனிமையில் வாழ்ந்தாலும் பரவாயில்லை. காலஞ்சென்ற எனது தகப்பனாரின் கொடிய சத்துருக்களின் நடுவே நான் வாழும் ஒரு பயங்கரமான நிலைக்குள்ளானேன். என் போன்ற துர்அதிர்ஷ்டசாலிக்காக கவலைப்பட இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்?

நான் ஆரம்ப பள்ளியில் எனது தாத்தா வீட்டிலிருந்து படிக்கும்போது எனக்கு ஒரு நண்பனைத் தெரியும். அவன் பெயர் சிண்டம் ஆன்உக்கே என்பதாகும். அவன் எனக்கு நேரிட்ட எல்லா துயரங்களையும் கேள்விப்பட்டிருக்கின்றான். அவன் என்னை அதிகமாக நேசிப்பான். அவன் என்னை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அவனது பெற்றோர்களின் முன்னிலையில் நிறுத்தி எனக்கு சம்பவித்த காரியங்களை எல்லாம் அவர்களிடம் விபரமாய் சொன்னான். அதைக்கேட்ட அவனது தாய் தந்தையர் என்னைத் தங்களது இரண்டாம் மகனாக ஏற்றுக்கொண்டனர். எனது கண்ணீரின் துயர வாழ்வு மறைந்து மகிழ்ச்சி திரும்பவும் துளிர்க்கத் தொடங்கியது. அந்த அன்புப் பெற்றோர் என்னை மிகவும் நன்றாகக் கவனித்தனர். நான் திரும்பவும் வாழ்வில் சந்தோஷமாக இருந்தேன். எனது தாயார் உலகில் உயிரோடிருந்தபோது ஆராதித்த ஜீவனுள்ள ஆண்டவர் எங்கேயோ மறைந்து இருந்து கொண்டு

எனக்கு இந்த புதிய பெற்றோரை கொடுத்திருக்கின்றார் என்று நான் என் உள்ளத்திலே எண்ணிக் கொண்டேன்.

நான் அந்த சந்தோஷமான நிலையில் 2 ஆண்டு காலம் வரை மாத்திரமே வாழ்ந்து வந்தேன். அதற்குள்ளாக சாத்தான் என்னைத் திரும்பவும் கோர பயங்கரமாகத் தாக்கினான். என்னைத் தங்களது பெற்ற மகனாக ஏற்று போஷி த்த சிண்டம் ஆன்உக்கேயின் அருமைப் பெற்றோர் தாங்கள் பயணம் செய்த கார் விபத்துக்குள்ளானதில் அந்த இடத்திலேயே மாண்டு போனார்கள். அவர்களுடன் அவர்கள் அன்பு குமாரனும், எனது ஆருயிர் தோழனுமான சிண்டமும் மடிந்தான். அந்த துயர செய்தியை கேள்விப்பட்ட நான் ஆறாத் துயரத்தின் காரணமாக பூமியிலே சாய்ந்து விழுந்தேன். அப்பொழுது இருந்திருக்கக்கூடிய எனது வாழ்வின் கண்ணீரின் நிலையை நான் உங்களது கற்பனைக்கே விட்டுவிடுகின்றேன். சிண்டன் ஆன்உக்கே மற்றும் அவனது பெற்றோருடைய சவ அடக்க காரியங்களில்நான் கலந்து, சாப்பாடு தயாரிக்க தேவையான விறகுகளை கொண்டு வந்து கொடுத்து, இன்னும் கைவேலைகளை எனது கண்களிலிருந்து கண்ணீர்வடிய வடிய செய்து கொடுத்து முடித்த பின்னர் நான் திரும்பவுமாக எனது பெற்றோரின் ஆள் அரவமற்ற பாழான வீட்டிற்குச் சென்று எனது உயிர் வாழ்வுக்காக மிகவும் இழிவான வேலைகளையும் கூட நான் செய்து வந்தேன். தோட்டம் துரவுகளிலும் என்னைவிட வயதில் மூப்பானவர்களோடும் நான் சென்று அவர்களுடன் மீன் பிடித்து வேலை செய்தேன்.

ஒரு நாள் அந்த மனிதன் என்னைத் தனது பண்ணையில் வேலைக்கு அமர்த்தினான். அவனிடம் நான் சேர்ந்த போது அவன் என்னிடம் பலவித கேள்விகளைக் கேட்டான். எனது தந்தைக்குரிய நிலபுலங்கள் எங்கெங்கே இருக்கின்றது என்பதை நான் அவனுக்கு காண்பிக்கும் படியாக அவன் என்னிடம் கேட்டான். அந்த நிலங்களில் சிலவற்றை நான் அவனுக்குக் கொடுக்கும்படியாக என்னை வற்புறுத்தினான்.

அத்துடன் எனது வேலைக்கான கூலி தினமும் இரவில் ஒரு வேளை உணவு மாத்திரம் என்றும் கூறினான். 13 வயது பையனுக்கு மரித்த அவனது தந்தையின் நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றது என்று எப்படித் தெரியும்? நான் அந்த மனிதனுடைய வார்த்தைகளை எதிர்த்த போது அவன் என்னை காட்டிலே கொண்டு போய் கொல்லப் போவதாக பயமுறுத்தினான். நான் அதைக் கேட்ட போது என் உயிருக்குப் பயந்து அலறி அடித்துக் கொண்டு ஓடினேன். எனக்கு உதவி செய்யும் படியாக மக்களைக் கேட்டும் அவர்கள் எனக்கு உதவி செய்யவில்லை. ஆனால், தேவனிடமிருந்து எனக்கு ஒத்தாசை வந்தது.

ஒரு நாள் அந்த மனிதன் தனது கையில் கத்தியுடன் என்னைக் காட்டில் கொல்லுவதற்காக என்னைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தான் நான் அந்த மனிதனைவிட மிகவும் வயது குறைந்த இளைஞனானதால் வெகுவேகமாக ஓடி அவனுக்குத் தெரியாமல் சுமார் 8 அடி ஆழமுள்ள குழி ஒன்றில் விழுந்து மறைந்து கொண்டேன். அடர்த்தியான பசும் புற்கள் என்னை மூடி மறைத்துக் கொண்டது. வேறு வழியாக ஊருக்குள் வந்து அந்தக் கொடியவனின் தீச்செயலை மக்களுக்குக் கூறினேன். ஆனால் யாரும் எனக்கு சகாயம் செய்ய முன்வரவில்லை.

அலீஸ் என்ற எனது பள்ளித் தோழியை சந்தித்தது

இந்த என்னுடைய கஷ்டமான இன்னல்களின் மத்தியில் நான் அலீஸ் என்ற எனது பள்ளி தோழியைச் சந்தித்தேன். அவள் எனது கிராமத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவள்தான். என்னைவிட அவள் 5 வயது மூத்தவள். நானும் அவளும் ஒன்றாகவேதான் படித்தோம். ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில், ஒரே இருக்கையில் (பெஞ்சில்) நாங்கள் அமர்ந்திருந்தோம். நாங்கள் இருவரும் மிகவும் அன்பாக இருந்தோம் நாங்கள் இருவரும் பெரியவர்களாகும்போது ஒருவரையொருவர் திருமணம் செய்து கொள்ளுவது என்றும் தீர்மானித்தோம். படிப்பறிவில்லாத,

தாய்தந்தையறில்லாத, அடுத்த வேளை உணவுக்கும் வழியில்லாத தன்னைவிட 5 வயது மூத்த ஒரு பெண்ணை தனது 11 ஆம் வயதில் மணம் புரிய ஆசை கொள்ளும் ஒரு சிறுவனை குறித்து நாம் என்ன நினைப்போம்? உண்மையில் அது ஒரு விஷமத்தனமான காரியம்!

அலீஸ் தனது ஆரம்ப கல்வியை எனது கிராமத்தில் முடித்த பின்னர் ஆக்கூர் என்ற பட்டணத்திலுள்ள கல்விசாலைக்கு தனது உயர் கல்வியை கற்கச் சென்றாள் அங்கிருந்தாலும் அவள் என்னை மறக்கவில்லை. அவ்வப்போது எனக்கு அவள் காதல் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தாள்.

அடுத்த முறையாக நான் அவளை சந்தித்தபோது எனக்கு வயது 15ம் அவளுக்கு 20 வயதுமாக இருந்தது. அவள் தனது கல்வியை முடித்து நைஜீரியாவின் லாகோஸ் பட்டணத்திலுள்ள ஸ்டாண்டர்ட் வங்கியில் பணி ஆற்றிக் கொண்டிருந்தாள். எனது பெற்றோருக்கு நேர்ந்த கதி எனது வறுமை நிலை எல்லாம் அலீசுக்கு நன்கு தெரியும். இந்தக் காரியங்களை அவள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவள் என்னை லாகோசில் வந்து தன்னை சந்திக்கும்படியாக கேட்டுக் கொண்டாள். தனது முகவரியை எனக்குக் கொடுத்ததுடன் எனது செலவுகளுக்காக 50 நைராக்களும் (சுமார் 5500 ரூபாய்) தந்தாள் 15 வயது பையனுக்கு அந்த பெரிய தொகையானது அது வரை நாள் ஒன்றுக்கு 2 நைராக்கள் கூட நான் சம்பாதித்தது கிடையாது வானத்திலிருந்து கிடைக்கப் பெற்ற மன்னாவாக நான் அதை எண்ணிக் கொண்டேன்.

லாகோஸ் பட்டணத்தில் ஏராளமான பணம் கிடைக்கும். மனமகிழ்ச்சியாக வாழ எல்லா வசதி வாய்ப்புகளும் அங்குள்ளன. நாம் போய் அதை சுதந்தரிக்க வேண்டியதே தவிர வேறொன்றுமில்லை என்று நான் எனக்குள்ளாக எண்ணிக்கொண்டேன். லாகோஸ் செல்லுவதால் எனது பசி,

பட்டினி கொடுமையிலிருந்து எனக்கு விடுதலை. எனது உயிரை வாங்கத் தேடும் எனது தந்தையின் சத்துருக்களிடமிருந்தும், எனது பகைஞர்களிடமிருந்தும் எனக்கு விடுதலை. ஆம், எல்லா தீமைகளிலிருந்தும் எனக்கு ஆனந்த விடுதலை என்று நான் எனக்குள்ளாக எண்ணி மகிழ்ந்தேன்.

லாகோஸ் பட்டணம் சென்றது

மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரண வழிகள் (நீதி 16:25) துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப் போலிருக்கிறார்கள், அது அமர்ந்திருக்கக் கூடாமல் அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார். (ஏசா 57:20,21)

இயேசு இரட்சகர் இல்லாமல் ஒருவன் வாழும் சமாதானமற்ற வாழ்க்கையையே மேலே கண்ட தேவனுடைய வசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. நான் எனது அழகிய ஆப்பிரிக்க கிராமத்தை விட்டுவிட்டு 5500 ரூபாய்களுடன் மிகவும் ஆனந்த சந்தோஷத்தோடு எனது காதலி அலீஸ் எனக்குக் கொடுத்த அவளது முகவரியை கரத்தில் எடுத்துக் கொண்டு விடுதலை, சுதந்திரம், சுயாதீனம், மனமகிழ்ச்சியை நோக்கி பிரயாணம் போய்க் கொண்டிருந்தேன். இவை எல்லாம் எனது அறியாப் பருவ வீண் நினைவுகள் என்பது அப்பொழுது எனக்கு துளிதானும் தெரியவில்லை.

நான் லாகோஸ் பட்டணத்தில் வந்து இறங்கியபோது அந்தப் பட்டணம் எனக்கு மிக அழகாக தெரிந்தது. அந்தப் பட்டணத்தை நான் மோட்சத்துக்கு சமமாக எண்ணிக்கொண்டேன். எங்கு நோக்கினும் உயர்ந்த அழகான கட்டிடங்கள், எல்லாருடைய முகத்திலும் சந்தோஷ புன்னகை (அது பொய் சந்தோஷம் என்பது எனக்குத் தெரியாது) ஆ. இதுவேதான் பரலோகம் என்று நான் நினைத்து பூரித்தேன். மக்கள் அனைவரும் ஆத்திர அவசரத்துடன்

காணப்படுபவர்களாகவும், அவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் காரியத்திலேயே கவனம் செலுத்துபவர்களாகவும், காணப்பட்டனர். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தபடியால் நான் எனக்குள்ளாக நான் இப்பொழுது சுதந்திரவாளி என்பதை உணருகின்றேன். என்று கூறிக்கொண்டேன்.

லாகோசிலுள்ள விக்டோரியாதீவின் அகின்றோலா என்ற இடத்தில் அலீசும் அவளது பெற்றொரும் என்னை வெகு அன்பொழுக வரவேற்றார்கள். என்னைக் குறித்தும், எனது வாழ்க்கையின் பின்னனியம் குறித்தும் அலீசுடைய பெற்றோருக்கு நன்கு தெரியும் ஏனெனில், நாங்கள் எல்லாரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் எனக்கும் அவர்கள் மகள் அலீசுக்குமுள்ள மறைமுக உறவு அவர்களுக்குத் தெரியாது.

அதின் பின்னால் அலீஸ் என்னை தான் மணந்து கொள்ளப் போகும் மனிதன் என்று பெற்றோருக்கு அறிமுகப்படுத்தினாள். அதைக் கேட்ட அவர்கள் பலத்த அதிர்ச்சியடைந்தார்கள். எனக்கு போதிய கல்வி அறிவைக் கொடுத்து அதின் பிறகு என்னை கலியாணம் செய்து கொள்ள அலீசுக்கு அவள் பெற்றோர் ஆலோசனையும், அனுமதியும் அளித்தனர். ஆனால், அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. நான் அவளது வசிப்பிடத்தின் மாடியிலேயே அவளுடன்தான் தங்கியிருக்க வேண்டும் என்று அவள் வற்புறுத்தி வந்தாள். இந்த குடும்ப வாக்குவாதம் 4 நாட்கள் வரை நீடித்துச் சென்றது.

இந்த வாக்குவாதம் மிகவும் பலமாக நடந்து கொண்டிருந்த வேளையில் ஏதோ ஒரு விளக்கமளிக்க முடியாத வல்லமையால் அவளது பெற்றோர் ஆட்கொள்ளப்பட்டு நான் அவர்களுடைய மகள் அலீசுடைய மாடியில் அவளுடன்வாழ ஒப்புக் கொண்டனர். அலீஸ் வெகு அழகான ஒரு பெண். நைஜீரியாவின் மிக உயர்ந்த வங்கியான ஸ்டாண்டர்ட் வங்கியில் அக்கவுண்டண்ட்டாக வேலை செய்பவள். மாதந்தோறும் பல ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுபவள். அவள் என்னை இந்த

உலகத்திலே மிகுந்த செல்வந்தனாக்கி எனது அனைத்துக் தேவைகளையும், ஆசை விருப்பங்களையும் நிறைவேற்றுவதாக அவள் எனக்கு வாக்கு கொடுத்தாள். நீ அமர்ந்து சும்மாயிருந்து வாழ்க்கையை அனுபவித்தாலே போதுமானது என்ற வார்த்தையே அவள் எனக்கு கொடுத்த வாக்காகும்.

எனது மகிழ்ச்சிக்கு அளவில்லை. சில மாதங்களுக்கு முன்னர்தான் நான் எனது உயிரை வாங்கத் தேடும் கொடிய மாந்தர் நடுவில் மரண பயத்தோடும், திகிலோடும் ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தேன். பசி, பட்டினி, வறுமை நிர்வாணம், பொல்லாத மாந்தரின் காரணமில்லாத கடும் பகைமை நடுவே துயரத்தோடு வாழ்ந்து வந்த நான் இப்பொழுது இங்கே ஒரு பெரிய பட்டணத்தில் அங்குள்ள ஒரு அழகிய மாடி வீட்டில் பாங்குற ஜோடித்து அலங்கரிக்கப்பட்டதும், எல்லாப் பொருட்களும் நிறைந்ததுமான அறைகளில் சௌந்தரியவதியான மனைவியுடன் வாழும் பாக்கியம் பெற்றுள்ளேன். இந்த உலக வாழ்க்கை அளிக்கக்கூடிய எல்லா இன்பங்களையும், மனமகிழ்ச்சிகளையும் எனக்குத் தருவதாக அந்த அழகிய மனைவி நிச்சயமான வாக்கும் எனக்குக் கொடுத்திருக்கின்றாள். அவள் தன் வசமுள்ள ஏராளமான பணங்களையும், என் உள்ளத்தை களிப்பூட்டும் பொருட்களையும் எனக்குக் காண்பித்தாள். இந்த உலகம் இத்தனை மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய பொருட்களால் நிறைந்திருக்கும் என்பதை நான் இதற்கு முன்பு அறியவே இல்லை.

பிசாசு மகா கொடிய வஞ்சகன். அவன் ஏமாற்றுக்காரன். திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் (யோவான் 10:10) என்றுதேவனுடைய வார்த்தை திட்டமும் தெளிவுமாகப் பேசுகின்றது. ஆனால், தேவ மைந்தனாகிய இயேசு கிறிஸ்துவோ நமக்கு ஜீவனைக்கொடுக்கவும், அதை பரிபூரணமாகக் கொடுக்கவும் இந்த உலகத்துக்கு வந்ததாக அதே தேவ வார்த்தை சொல்லுகின்றது.

இதை வாசிப்போனே, மறந்துவிடாதே! சாத்தானாம்

பிசாசிடம் எந்த ஒரு இலவச வெகுமதியும் எக்காலத்திலும் கிடையாது. அவன் உனக்கு ஒரு வெகுமதி கொடுக்கின்றான் என்றால் அது உனது விலையேறப்பெற்ற ஆத்துமாவுக்கு பண்டமாற்றாகவே (பதிலாகவே) கொடுப்பான் என்பதை நீ மறக்க வேண்டாம். நான் அலீசுடன் இந்த உலக வாழ்வின் மயக்கத்தில் 3 மாத காலங்களே பன்றி போல பாவச்சேற்றில் உருண்டு புரண்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன். அதின் பின்னர் நூதனமானதும், பயங்கரமானதுமான காரியங்கள் வந்து சம்பவிக்கத் தொடங்கின.

அலீஸ், சாத்தானின் உடன் வேலையாள்

உலக வாழ்வின் இன்பங்களை நான் அனுபவித்து ஆனந்தித்துக் கொண்டிருந்த இந்த நாட்களான ஒன்றின் நள்ளிரவு ஜாமம் ஒன்றில் நான் திடீரென எனது தூக்கத்திலிருந்து கண் விழித்தபோது தனது இரையை இறுக்கி, நெருக்கி கொன்று விழுங்கக் கூடிய ஒரு பெரிய மலைப்பாமபு எனது படுக்கையில் எனது அருகாமையில் படுத்திருப்பதை நான் கண்டு திடுக்கிட்டேன். அதைப் பார்த்ததும் நான் பயந்து சத்தமிட எண்ணினேன். ஆனால், என்னால் அவ்வாறு சத்தம் எழுப்ப இயலாதவனானேன். சில இராக்காலங்களில் நான் கண் விழித்து பார்த்தபோது அலீசின் உடல் வெளியிலிருந்து உள்ளே தெளிவாகக் காணக்கூடிய அளவுக்கு கண்ணாடி பொம்மை போல இருப்பதை நான் கண்டு அச்சமுற்றேன்.

சில இராக்காலங்களில் அலீஸ் எங்கள் அறையிலிருந்து திடீரென காணாமல் போய் வெகு நேரம் சென்றதன் பின்னர் திடீரென திரும்பவும் காணப்படுவாள். அநேக இராக் காலங்களில் எங்கள் அறைகளில் நூதனமான குரல்களும், குழு நடனங்களில் கேட்கும் காலடிச் சத்தங்களும், ஜலங்கை ஒலிகளும் எழும்புவதை நான் கேட்டேன். இந்தவிதமான பயங்கரமான· காரியங்கள் எங்கள் அறைகளில் நடப்பதைப் பார்க்கவும் கேட்கவும் நான் மிகவும் அச்சமுற்றவனாக நீண்ட நாட்களுக்கு அதைப் பார்த்து சகித்துக் கொண்டிருக்க இயலாமல்

அதை அலீசிடம் கேட்க தீர்மானித்து இறுதியில் அவளிடமே கேட்டும் விட்டேன். அதற்கு அவளிடமிருந்து வந்த முதல் பதிலும், பிரதிபலிப்பும் பயங்கரமான எச்சரிக்கையாகவே எனக்கு அமைந்தது இந்த காரியத்தைக் குறித்து நீ, திரும்பவும் என்னிடம் கேட்காதே. அப்படிக் கேட்பாயானால் நான் உனக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டியதாக இருக்கும் என்பதே.

அந்த நாளிலிருந்து எனது வாழ்க்கை மா பயங்கரமான ஆபத்தில் மாட்டிக் கொண்டிருப்பதை நான் துயரத்தோடு கவனித்தேன். லாகோஸ் பட்டணத்துக்கு வந்து இவ்விதமான பயங்கரங்களை என்னளவில் கண்டு நடுநடுங்கி வாழ்வதை விட எனது சொந்த கிராமத்தில் பாடு வறுமைகளுடனும் சத்துருக்களின் மிரட்டல்களின் மத்தியிலும் வாழும் வாழ்வே எத்தனை பாக்கியமான வாழ்வு என்று நான் எனக்குள்ளாக எண்ணி எண்ணி ஏங்கினேன்.

இரண்டு நாட்கள் கடந்த பின்னர் அலீஸ் நிறைய வெகுமதிகளோடும், வாய் நிறைய புன்னகைகளோடும் என்னண்டை வந்து என்னைக்கட்டிப் பிடித்து முத்தமிட்டு, அவள் என்னை அதிகமாக நேசிப்பதாகவும் சொன்னாள். அத்துடன் வீட்டில் நடக்கும் காரியங்களைக் குறித்து நான் பயப்பட அவசியம் இல்லை என்றும் வருகிற நாட்களில் எல்லாக் காரியங்களையும் அவள் எனக்கு விளக்கிக் கூறப் போவதாகவும் கூறினாள்.

அத்துடன் அவள் என்னை ஒரு இரவு விடுதிக்கு அழைத்துச் சென்று அவள் என்னை ஒரு மிகவும் செல்வச் சீமானாக ஆக்கப் போவதாகவும், அவள் அறிந்து கொண்ட காரியங்கள் அனைத்தையும் ஒரு நாள் நானும் அறிந்து கொள்ளுவேன் என்று சொன்னாள். இரவு விடுதியிலிருந்து நாங்கள் வீடு திரும்பியதும் காரியங்கள் யாவும் வழக்கம்போல நடப்பதாகத் தெரிந்தாலும், எனக்கும் அலீசுக்கும் இடையிலான உறவுகள் சுமூகமாக காணப்பட்டாலும் நான் ஒரு கொடிய ஆபத்தில் அங்கும் இங்கும் நகர முடியாமல் சிக்குண்டிருப்பதை என்னளவில்

திட்டமாக உணர்ந்தேன். இந்த பயங்கரமான சூழ்நிலையிலிருந்து நான் எப்படி வெளியே தப்பிச் செல்லுவது? தப்பி எந்த இடத்திற்குப் போவது என்ற கேள்விகள் எனக்குள் எழுந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை மனதில் கொள்ளுதல் அவசியமாகும். அதாவது அலீசின் பெற்றோருக்கு தங்கள் மகள் இத்தனை இள வயதுள்ளவளாக இருந்தபோதிலும் அவள் இத்தனை தீவிராமக மாய மந்திரங்களிலும், சாத்தானின் ஆவி வழிபாட்டிலும் ஈடுபட்டு அவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரியாக இருப்பதை அவர்கள் கொஞ்சங்கூட அறியாதவர்களாக இருந்தார்கள். நான் உலகத்தில் உயிரோடு வாழ விரும்பும் பட்சத்தில் இந்த காரியங்களைக் குறித்து நான் அவளது பெற்றோரிடத்தில் எதுவுமே சொல்லக் கூடாது என்று அலீஸ் என்னை கடுமையாக எச்சரித்திருந்தாள். அன்பான வாசகரே, ஒரு 20 வயது இளம் பெண் இந்தக் காரியங்களை எல்லாம் செய்வாளா என்று நீங்கள் கற்பனை பண்ணி பார்க்க முடியுமா? வெளி உலகம் அவளை ஒரு அழகான, எந்த ஒரு தீங்கும் செய்யாத பேதமைப் பெண்ணாக, ஒரு புகழ்பெற்ற வங்கியில் பணிபுரியும் ஞானமுள்ள ஸ்திரீயாக மட்டுமே பார்ப்பார்கள். ஆனால், அவள் பொல்லாப்பேயின் ஒரு உண்மையுள்ள வேலையாள் என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த உலகத்தில் அலீஸ் என்ற சாத்தானின் ஏஜெண்டைப் போல ஏராளமான மக்கள் உள்ளனர். அதை நீங்கள் இந்த சாட்சியின் பின் பகுதியில் காணலாம்.

ஒரு பயங்கரமான கண்டு பிடிப்பு

ஒரு நாள் அலீஸ் தனது வங்கிக்கு வேலைக்குச் சென்றதின் பின்னர் நாங்கள் இருந்த மாடி வீட்டின் அறைகளையும் பொருட்களையும் நான் சோதனையிட்டு தேடிப் பார்க்க திட்டமிட்டேன். அவள் வெகு அழகும் இளமை துடிப்போடிருந்த வண்ணமாகவே அவள் வாழ்ந்த வீட்டையும் அறைகளையும் நேர்த்தியாக அழகுபடுத்தி வைத்திருந்தாள். 4 குளிர்பதன

பெட்டிகளை அவள் வைத்திருந்தாள். ஒரு குளிர் பதனப்பெட்டியை நான் திறந்து பார்த்தபோது திடுக்குற்றேன். அங்கே மனித மண்டை ஓடுகளும், மனிதனின் வித்தியாசமான உடல் உறுப்புகள் பச்சையாகவும், காய்ந்தும் இருந்தன. வீட்டின் உள் கூரையில் மனித எலும்புக்கூடுகள் இருந்தன ஒரு அறையில் மறைவான ஒரு இடத்தில் ஒரு கூஜாவில் இரத்தம் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. அதின் மத்தியில் ஒரு மிகமிக சிறிய மரமும் அதின்மேல் ஒரு சிகப்பு துணியும் மூடப்பட்டிருந்தது. நான் அந்த வீட்டில் கண்ட காரியங்களை தொடர்ந்து எழுத விரும்பவில்லை.

இவைகளை எல்லாம் பார்த்த நான் ஒரு செத்த மனிதனைப் போலானேன். நான் எங்கும் தப்பி ஓட முடியாது என்றும், என்ன நேர்ந்தாலும் அதை சந்திப்பதை தவிர நமக்கு வேறு வழியில்லை என்றும் தீர்மானித்தவனாக எனது உதடுகளை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தேன். அலீஸ் தனது வேலையிலிருந்து வீடு வந்ததும் என்னை தனது எரிபந்தமான கண்களால் ஏற இறங்கப் பார்த்தாள். அவளது அந்தப் பார்வை, அவள் வங்கியில் தனது ஏராளமான அவசரப்பணிகளிலிருந்தபோதினும் வீட்டில் நான் என்ன என்ன காரியங்கள் எல்லாம் செய்தேன் என்பதை நேருக்கு நேராக கண்கூடாக பார்த்தவள் போல இருந்தது. நான் செய்தது, நான் பார்த்தது ஒன்றும் அந்தப் பேயின் கண்களோடும், பேயாகவும் இருந்த அவளுக்கு மறைவாக இருக்கவே இல்லை. ஆ!சாத்தானுக்கதான் எத்தனை வல்லமை உள்ளது என்று பாருங்கள்! உண்மைதான் ஆண்டவர் சொன்னது போல - அவனுக்கும் வல்லமையும், இருக்கத்தான் செய்கிறது. (லூக்கா 10:19)

சாத்தானின் ஆவிகளின் உலகத்தோடு எனது சந்திப்பு

அடுத்து வந்த நாளில் அலீஸ் என்னை ஒரு கூட்டத்திற்கு தன்னுடன் வரும்படியாக அழைத்தாள். நான்

ஏற்கெனவே அவளது அடிமையாகிவிட்டபடியால் நான் எந்த ஒரு மறுப்பும் பேசாமல் அவளுடன் சென்றேன். நாங்கள் லாகோஸ் பட்டணத்தின் எல்லைப் புறத்திலுள்ள ஒரு பெரிய கட்டிடத்திற்குச் சென்றோம். அங்கு சென்றதும் அந்த கட்டிடத்தின் நிலவறைக்குள் (பூமிக்கு கீழுள்ள அறை) பின் நோக்கிச் சென்றோம். அலீஸ் என்னை பின் நோக்கியே அந்த அறைக்குள் செல்ல சொன்னதுடன் அவளும் அவ்வாறேதான் அந்த பெரிய அறைக்குள் வந்தாள். அந்த பெரிய சபா மண்டபத்தில் சுமார் 500 பேர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் எல்லாரும் இளம் வாலிபர்களும் இளம்பெண்களுமாகக் காணப்பட்டனர். ஒரு வட்டம் போல் அவர்கள் அமர்ந்திருந்தனர். அந்த வட்டத்திற்கு மேலாக ஒரு உயர்ந்த இடத்தில் ஒரு மனிதன் அமர்ந்திருந்தான். அவனது தலை மாத்திரமே வெளி தெரிந்ததேயல்லாமல் அவனது சரீரம் காணப்படவில்லை. அவன்தான் அவர்களின் தலைவன். அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தோர் மாணவர்கள் பட்டதாரிகள் அதிகாரிகள், ஆசிரியர்கள் முதலானோர் ஆவார்கள்.

அலீஸ், அந்த சபாமண்டபத்தின் சுவரிலுள்ள ஒரு பொத்தானை அழுத்தவே ஒரு இருக்கை பூமியிலிருந்து எழும்பி வந்தது. அதில் நான் அமர்ந்து கொள்ளும்படியாக அவள் கூறினாள். அதின் பின்னர் அவள் திரும்பவும் பொத்தானை அழுத்தவே மற்றொரு இருக்கை எழுந்து வந்தது. அதில் அவள் அமர்ந்து கொண்டாள். நான் அவர்களது புதிய அங்கத்தினன் என்று அலீஸ் என்னை அந்தக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தியபோது கூட்டத்தில் பலத்த கர ஒலியும் ஆரவாரமும் உண்டாயிற்று. அவர்கள் எல்லாரும் என்னை வாழ்த்தி வரவேற்றனர். என்னை புதிய அங்கத்தினனாக கொண்டு சென்ற காரணத்திற்காக அலீசுக்கு உயர் அந்தஸ்து கிடைத்து. அந்தக் கூட்டத்தில் சம்பாஷித்து கொண்ட் காரியங்கள் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. கூட்டத் முடிவில் நாங்கள் புறப்பட ஆயத்தமானபோது அந்தக் கூட்டத்தின் தலைவன் என்னைப் பார்த்து அடுத்த நாள் நான் மாத்திரம்

தனிமையாக கூட்டத்திற்கு வரும்படியாக அழைத்தான். ஆவிகளின் உலகத்தோடு நான் சந்தித்தது இதுவேதான் முதல் தடவையாகும்.

அந்த நாளின் இரவு 2 மணிக்கு அலீஸ் என்னை எனது தூக்கத்திலிருந்து எழுப்பினாள். சாத்தானின் அந்தகார சக்திகள் தங்களது வழக்கமானகூட்டங்களளைக் கூட்டுவதும், கொடிய சதி திட்டங்களைத் தீட்டுவதும், இந்த மணி நேரத்தில்தான். அவள் என்னை எழுப்பி நான் அதிர்ச்சியடைக்கூடிய காரியங்களை என்னிடம் தெரிவித்தாள்.

"நீ காண்பது போல நான் ஒரு சாதாரண மனுஷி அல்ல. நான் பாதி மனுஷிகத்திலும், பாதி ஆவி ரூபத்திலும்தான் இருக்கின்றேன். மொத்தத்தில் சொல்லப்போனால் நான் முழுமையாக ஆவி ரூபத்தில்தான் உள்ளேன். நீ எனது அறையின் குளிர்பதனப் பெட்டிகளிலும் இதர இடங்களில் பார்த்தவை எல்லாம் எனது அதிகாலை சாத்தானின் ஜெபங்களில் நான் பயன்படுத்தும் பொருட்களாகும். அவைகள் தான் எனது அன்றாடக அலுவல்களில் என்னை வழிநடத்தும் ஆவிகளாக இருக்கின்றன. கூரையில் நீ கண்ட மனித எலும்புக் கூடுகளின் காரியத்தை நான் உனக்கு பின்னர் விளக்கிக் கூறுவேன் என்று சொன்னாள்.

அவளுடைய வார்த்தைகளுக்கு மாறுத்தரமாக நான் எந்த ஒரு வார்த்தையும் பேசவில்லை. பின்னர், அவள் சில மாயா ஜால மந்திர புத்தகங்களை எனக்குக் கொடுத்து அவைகளை வாசிக்கும்படியாக சொன்னாள். நானும் அதற்குச் சம்மதித்தேன். அவைகளை வாசிக்க வாசிக்க அவைகளின் மேல் என்னையறியாமலே ஒரு விருப்பமும், வாஞ்சையும் உண்டாயிற்று.

நான் அந்தக் காரியங்களில் மிகவும் மன விருப்பமாயிருப்பதை கண்ட அலீஸ் எனது பெயரை இந்தியாவிலுள்ள ஆவி உலகத்துக்கு உடனே அனுப்பிவைத்தாள். அந்த மாந்திரீக புத்தகங்களில் நான் ஆசை கொண்டது எல்லாம் என்னை அறியாமல் நிகழ்ந்த காரியங்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

முந்தின நாள் கூட்டத்தில் கூட்டத் தலைவன் கேட்டுக் கொண்டவாறு நான் தனியனாக அந்தக் கூட்டத்திற்குச் சென்றேன். நான் அந்த கூட்டத்தில் 9 பேர்களையும் எங்கள் நடபடிகளை கவனிக்கும் சாட்சிகளையும் கண்டேன். நாங்கள் அந்தக் கூட்டத்தின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படும் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் 10 பேரும் சபா மண்டபத்தின் மையப் பகுதிக்கு அழைக்கப்பட்டு கீழ்க்கண்ட காரியங்கள் எங்களுக்கு செய்யப்பட்டன.

1. கான்கிரீட் போன்ற சாந்து பொருளால் எங்கள் உடல்களை பூசினார்கள். இது எங்களை ஆவி உலகத்தின் அங்கத்தினர்களாக ஆவதற்கு தகுதிப்படுத்திற்று.

2. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் எண்ணெய் போன்ற திரவ பதார்த்தம் நாங்கள் குடிக்கும்படியாக கொடுக்கப்பட்டது. இந்தப் பானமானது சாத்தானுடைய கிரியைகளை நாங்களை செய்து அவனுடைய ஆளுகையை பூமியிலே நிலை நிறுத்தக்கூடிய அவனது பிரதிநிதித்துவத்தை எங்களுக்கு அளிப்பதாக இருந்தது.

3. துப்பாக்கி வெடி மருந்து (கன் பவுடர்) போன் ஒரு பவுடர் எங்கள் தலைகளில் பூசப்பட்டது. இது சாத்தானின் ஆவி உலகத்தின் அந்தரங்கங்களை நாங்கள் வகையறுத்து கண்டு கொள்ளக் கூடிய அளவிடற்கரிய ஆற்றலை எங்களுக்கு அளித்தது.

ஆப்பிரிக்கா கண்டத்தின் நைஜீரியா தேசத்தின் லாகோஸ் நகரத்தில் மிகவும் இரகசியமான ஒரு இடத்தில் நடைபெற்ற சாத்தானின் ஆவி உலக அங்கத்தினர்களின் கூடுகை நிகழ்ச்சி இந்தியாவில். பதிவாயிற்று. அடுத்த நாள் இந்தியாவின் சாத்தான் ஆவி உலகத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் நான் அந்த நான் அந்த கடிதத்தை எனது இரத்தத்தால் கறைப்படுத்தி அனுப்பும்படியாகக் கேட்டிருந்தது. அப்படியே நான்

எனது இரத்தத்தை வடித்து அந்தக் கடிதத்தை இரத்தக் கறையாக்கி அனுப்பி வைத்தேன். அந்தக் கடிதத்தை நான் தபால் மூலமாக அனுப்பினேன். இந்த செயலின் மூலமாக நான் சாத்தானின் ஆவி உலகத்திலிருந்து பின் திரும்பிச் செல்லும் பேச்சுக்கே இடம் இல்லாமல் போய்விட்டது. அப்படி நான் துணிந்து திரும்பும் பட்சத்தில் நான் கட்டாயம் கொல்லப்படுவேன். இந்த சாத்தானின் ஆவி உலகமே இனி நமது கதி, இனி நமக்கு எந்த ஒரு நம்பிக்கையுமே கிடையாது என்று நான் எனக்குள்ளாக நிச்சயித்துக் கொண்டேன்.

ஆலீசுடன் உடன்படிக்கை

ஒரு நாள் வெகு அதிகாலையில் வீட்டில் ஒரு முக்கியமான சடங்கு நடக்கப்போவதாக அலீஸ் என்னிடம் சொன்னாள். அப்படியே அன்று விடிகாலை 2 மணி அளவில் தவழ்ந்து செல்லக்கூடிய ஒரு பச்சிளம் பெண் குழந்தையை அவள் என்னிடம் கொண்டு வந்தாள். எனது கண்களுக்கு முன்பாகவே அவள் தனது கூரிய நகங்களைக் கொண்டவிரல்களால் அதின் கண்கள் இரண்டையும் தோண்டி எடுத்தாள். அந்த பச்சிளம் குழந்தை எழுப்பிய கதறல்கள் எனது இருதயத்தை பிளப்பதாக இருந்தது. பின்னர் அவள் அந்த பச்சிளம் பாலகியை துண்டு துண்டாக வெட்டி அந்த மாமிச துண்டங்களை ஒரு பெரிய தாலத்திலே வைத்து அதை நான் சாப்பிடும்படியாக என்னைக் கேட்டாள். நான் அதை சாப்பிட முடியாது என்று மறுத்து நின்றேன். உடனே அவள் மிகவும் குரூரமாக என்னை சீறிட்டு அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அந்தப் பார்வையின் பயங்கரத்தை நான் உங்களுக்கு விவரிக்க இயலாதவனாக இருக்கின்றேன். என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நான் அறியும் முன்னரே நான் அந்தக் குழந்தையின் மாம்சத்தை சுவைத்துக் தின்று கொண்டிருந்ததுடன் அதின் இரத்தத்தையும் எனது நாவால் நக்கிக் குடித்துக் கொண்டிருப்பதை நான் கவனித்தேன். இந்த பயங்கரமான காரியம் நடந்து கொண்டிருந்து

வேளையில் அவள் என்னைப்பார்த்து இவ்வாறு கூறினாள்: நான் செய்கின்ற எந்த ஒரு காரியத்தையும், நான் பேசுகின்ற எந்த ஒரு வார்த்தையையும் குறித்து பூமியிலே நீ எந்த ஒரு நபரிடமும் பேசக்கூடாது. இந்த உடன்படிக்கையை மீறுகின்ற நாளில் நீ சாவாய்.

அதின் பொருள் என்னவெனில், இந்த உடன்படிக்கையை மீறுகின்ற நாளிலே நான் சாத்தானால் கொல்லப்படுவேன் என்பதேயாகும். இதின் பின்னர் எனக்குள்ளாக நூதனமான எண்ணங்கள் உருவாக ஆரம்பித்தன. நான் முழுமையாக மாறுதலடைந்த ஒரு மனிதனானேன். நான் என்னை எந்த ஒரு நிலையிலும் கட்டுப்படுத்த இயலாமற் போய்விட்டேன். சர்தானுடைய ஆவி வணக்கத்துக்கு நேராக என்னை வழிநடத்துவதில் முழுமையான வெற்றி கண்டு பூரண திருப்தி அடைந்தாள். அவளுடைய சாத்தானின் பணி நிறைவுற்றது. இப்பொழுது அவள் எனக்கென்று ஒரு மாடி வீட்டை நேர்த்தியாக ஒழுங்கு செய்து கொடுத்துவிட்டு அதில் என்னை குடியமர்த்திய பின்னர் என்னுடனான உறவை முழுமையாக துண்டித்துக் கொண்டாள்.

இந்தியாவில் உள்ள ஆவி உலகத்தாருடன் எனது உடன்படிக்கை

இந்தியாவின் தலைநகர் டில்லியிலுள்ள சாத்தானின் ஆவி வணக்கத்தார் எனக்கு இரண்டாவது ஒரு கடிதம் எழுதியிருந்தர்கள். அதில் அவர்கள் என்னை டில்லிக்கு வரும்படியாக கேட்டுக் கொண்டிருந்ததுடன் கீழ்க்கண்ட காரியங்களை நான் செய்யும்படியாக எனக்கு உத்தர பிட்டிருந்தார்கள்.

அளவுக்கும் அதிகமாக நான் மிதமிஞ்சி உணவு உண்ண வேண்டும். செத்து நாறிப்போன எலிகளை சாப்பிட வேண்டும். இராக்காலங்களில் கல்லறைத் தோட்டங்களுக்கு நான் சென்று

அங்குள்ள ஆவிகளுடன் உடல் உறவுகொள்ள வேண்டும் என்பதே அது.

மேலே கண்ட அவர்களுடைய கட்டளையை நான் நிறைவேற்றியதன் பின்னர் பூமியில் எந்த ஒரு பெண்ணுடனும் உடல் உறவு கொள்ளும் எண்ணமும், ஆசையும் முழுமையாக என்னிலிருந்து எடுத்துப் போடப்பட்டது. டில்லியிலிருந்து வந்த கடிதத்துக்கு எனக்கு இந்தியாவுக்கு போவதற்கு விசா இல்லை என்றும், இந்தியாவுக்கு போகும் வழியே எனக்குத் தெரியாதென்றும் பதில் கொடுத்தேன்.

இந்த பதில் கொடுத்த சில நாட்களுக்கு பின்னர் ஒரு நாள் நான் எனது வீட்டை நன்கு பூட்டிவிட்டு வெளியே சென்றிருந்தேன். நான் திரும்பவுமாக வீட்டிற்கு வந்து கதவைத் திறந்தபோது எனது வீட்டின் நடைகூட இருக்கையில் ஒரு மனிதன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். அவனைப் பார்த்ததும் எனக்கு மிகவும் பயம் உண்டாயிற்று.

"நீ, இம்மானுவேல் ஆமோஸ்தானே? என்று அவன் என்னிடம் கேட்டான்.

ஆம், நான்தான் என்று அவனுக்குப் பதில் கொடுத்தேன். நான் உன்னை இந்தியாவுக்கு கொண்டு செல்ல வந்திருக்கின்றேன். நீ ஆயத்தப்படு என்று அந்த மனிதன் சொன்னான்.

நான் எனது வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் பூட்டிய பின்னர் அவன் அமர்ந்திருந்த சிறிய பஞ்சு மெத்தையில் அவனது உத்தரவுப்படி நான் அவனுக்குப் பின்னால் உட்கார்ந்தேன். அடுத்த உத்தரவு அவனுக்கு வருவதற்கு காத்திருப்பது போலத் தெரிந்தது. சற்று நேரம் சென்றதும் அவன் என்னைத் தொட்டான். அவ்வளவுதான், நாங்கள் இருவரும் மின்னல் வேகத்தில் ஆகாயத்தில் பறந்தோம். அடுத்த நிமிடத்தில் நான் டில்லியிலுள்ள ஒரு பெரிய சபா மண்டபத்தில் எனது வரவை ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருக்கும் ஒரு

கூட்டத்தின் நடுவில் நான் இருப்பதைக் கண்டேன் வகைவகையான மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருப்பதையும் சாம்பிராணி, கற்பூரம் போன்ற தூப புகைகள் அங்கு புகைந்து கொண்டிருப்பதையும் என்னால் காண முடிந்தது. எனது பெயர் எழுதப்பட்டிருக்கும் ஒரு கோப்பை (ஃபைல்) அவர்கள் என்னிடம் கொண்டு வந்து கொடுத்து அதில் நான் கையெழுத்திடும்படியாக அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் அதில் கையெழுத்திட்டதும் துண்டு துண்டாக வெட்டப்பட்ட மனித சரீரம் வைக்கப்பட்ட ஒரு தாலமும் காலியான ஒரு கூஜாவும் கூட்டத்திற்கு வந்த ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது. அந்தச் சமயம் தலையில்லாத ஒரு மனித உடல் குதித்துக்கொண்டே வந்து காலியான எங்கள் கூஜா ஒவ்வொன்றிலும் தனது வெட்டப்பட்ட கழுத்திலிருந்து இரத்தத்தை ஊற்றிக்கொண்டே சென்றது. கூட்டத்திற்கு வநதோர் யாவரும் அந்த மனித மாமிசத்தை புசித்து மனித இரத்தம் குடித்த பின்னர் அந்தக் கூட்டம் முடிவுற்றது.

சாத்தானின் ஆவி உலகத்தால் நான் புடமிடப்பட்டது

சாத்தனின் ஆவி உலகம் இப்பொழுது என்னை முழுமையாக பரிசோதிக்கத் திட்டமிட்டனர். அதின்படி நான் சுமார் 700 அல்லது 800 அடிகள் ஆழமுள்ள கெடு பாதாளத்துக்கு நான் கொண்டு செல்லப்பட்டேன் அந்த பாதாள்த்தில் பட்சிக்கக் கூடிய காட்டு விலங்குகளும் கொடிய விஷமுடைய ஊர்ந்து செல்லும் பாம்புகளும் இன்னும் பலவிதமான ஜெந்துக்களும் கிடந்தன. இவைகள் எல்லாம் என்னை சித்திர வதை செய்யத் தொடங்கின. அந்தச் சமயம் நான் பயந்து சத்தமிடக் கூடாது என்பது எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. அப்படி நான் சத்தமிட்டால் பரீட்ஷையில் தோல்வியடைந்தவனாகக் கருதப்பட்டு நான் கொல்லப்படுவேன். இந்தப் பாதாளத்தில் நான் 7 நாட்கள் சித்தரவதை செய்யப்பட்டு வெற்றிபெற்ற பின்னர் என்னை இந்திய

கானகம் என்ற இடத்திற்குக் கொண்டு சென்றனர். இந்த கானகத்தில் நான் விதவிதமான சாத்தானின் பறவைகளைப் பார்த்தேன். இந்தச் சாத்தானின் பறவைகள், நாய்கள் பூனைகள் போன்ற மிருகங்களின் தலைகளைக் கொண்டிருந்த அதே சமயம் பறக்கக் கூடிய இறக்கைகளைக் கொண்டதுமாக இருப்பதை நான் கவனித்தேன். இந்தக் கானகத்தில் ஒரு குகை இருக்கின்றது. அந்தக் குகையை இந்த சாத்தானின் பறவைகள் மாத்திரம்தான் திறக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தன. அவைகள் அந்தக் குகையைத் திறந்ததும் நான் அதனுள்ளாகச் சென்றேன். அந்தக் குகைக்குள் நான் கண்டவைகளை உங்களுக்கு விவரித்துச் சொல்ல முடியாத அளவுக்கு அவைகள் அத்தனை பயங்கரமானவைகளாகும். அவைகளில் சில மனுஷ உருவங்களைப்போல இருந்தாலும் அவைகளின் முகங்கள் மனுஷ முகங்களாக இருக்கவில்லை அவைகளுக்கு வால்கள் இருந்தன. இந்த மிருக ஜாதிகளும் என்னை சித்திர வதை செய்தன. அந்த சித்திர வதைகளை நான் மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால் நரகத்தின் கொடிய பாடுகளில் பாதி பாடுகள் அவ்விடத்தில் இருந்தன. அங்கும் நான் 7 நாட்கள் உபாதிக்கப்பட்டேன். அதற்கப்பால் அங்கிருந்த ஒரு பெரிய புத்தகசாலைக்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே நான் எடுத்துப் படிக்கக் கூடிய சாத்தானுடைய மந்திரங்கள் எழுதப்பட்டபெரிய பெரிய புத்தகங்கள் இருந்தன. அவற்றில் இரண்டு புத்தகங்களை நான் படிப்பதற்காக எடுத்தேன். அவைகளில் ஒன்றும அபிசீனியா அல்லது அழிவு என்றும் அடுத்த புத்தகம் அசீனியா அல்லது உயிரையும் சரீர சுகத்தையும் கொடுப்பது என்று பெயர். அங்கு எனக்கு இன்னும் அதிகமான புத்தகங்களும் கொடுக்கப்பட்டன. நான் எனது நைஜீரியா தேசம் சென்றதும் நான் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றும் அங்கே எனக்குக் கற்பிக்கப்பட்டது. அவை இதுதான்:

ஒரு கூஜாவை வாங்கி அதை மனித இரத்தத்தால் நிரப்பி

அதினுள் ஒரு சின்னஞ் சிறிய மரத்தை வைக்க வேண்டும். அந்த கூஜாவுக்கு அருகில் ஒரு மனித மண்டை ஓடு, கழுகின் இறகுகள், காட்டு மிருகங்களின் தோல்கள், மலைப்பாம்பின் தோல் முதலானவற்றை வைக்க வேண்டும். அந்த கூஜாவின் இரத்தத்தை ஒவ்வொரு நாள் காலையும் சாம்பிரானி கற்பூர புகைகளுடன் வெளியே எடுத்து அதை திரும்பவும் கூஜாவில் ஊற்றிவைக்க வேண்டும். மனித கைகளினால் சமைக்கப்பட்ட எந்த ஒரு ஆகாரத்தையும் நான் இனி புசிக்கக் கூடாது என்றும் சாத்தானின் ஆவி உலகத்தின் மூலமாக நான் இனி போஷிக்கப்படுவேன் என்றும் எனக்குக் கூறப்பட்டது.

இந்தக் கட்டளைகளோடு நான் நைஜீரியா தேசத்துக்கு வந்தேன். நான் இப்பொழுது சாத்தானின் ஆவி உலகத்தின் முழுமையான உண்மையுள்ள குடிமகனாக மாறிவிட்டேன். உலகத்தின் எந்த ஒரு இடத்துக்கும் எனது விருப்பப்படி நான் இப்பொழுது செல்ல முடியும். பள்ளத்தாக்கு குகையில் நான் எடுத்து வந்த புத்தகங்களைப் படித்தபோது ஆகாயமண்டலங்களிலும் சாத்தானின் சேனைகள் இருப்பதை நான் அறிந்தேன் (எபேசியர் 6:12) எனக்குள்ள ஆவியை அந்த ஆகாய மண்டலங்களிலுள்ள சாத்தானின் ஆவிகள் அதிகரிக்கச் செய்வார்கள் என்ற திட்டமான நம்பிக்கையோடு எனது வீட்டைவிட்டு வெளியே வந்து எனது மந்திர சக்தியால் கொடுங்காற்றை வரவழைத்து அதின் உதவியால் ஆகாய மண்டலங்களுக்கு வந்தேன். அங்கே நான் சாத்தானின் ஆவிகளைக் கண்டேன். உனக்கு என்ன வேண்டும்? என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். எனக்கு இன்னும் அதிகமான சத்திகள் வேண்டும் என்று நான் அவர்களிடம் சொன்னேன். 2 வாரங்கள் நான் அந்த ஆவிகளின் கூட்டங்களோடு ஆகாயத்திலிருந்து அந்த ஆவிகளிடம் சக்திகளைப் பெற்றேன். நான் ஆரம்பத்தில் கூறிய வண்ணமாக நான் இப்பொழுது என்னையே கட்டுப்படுத்தக் கூடாமல் போய்விட்டேன். எனது

ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றையும் சாத்தானின் ஆவிகள் தங்கள் கட்டுப்பாட்டில் முழுமையாக வைத்திருந்தன.

நான் இன்னும் கூடுதலான சக்திகளைப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாகமுடையோனாய் குகையிலிருந்து நான் கொண்டு வந்த புத்தகங்களைப் புரட்டிப் பார்த்ததில் பூமிக்குக் கீழாகவும் தீய சக்திகள் இருப்பதை நான் அறிந்து கொண்டேன். ஒரு நாள் ஒரு மறைவான இடத்திற்கு சென்று நான் நின்று கொண்டிருந்த பூமியைப் பிளக்கச் செய்தேன். உடனே பிசாசுகள் நான் பாதாளத்துக்குள் இறங்க வசதியாக படிக்கட்டுகளை எனக்கு உருவாக்கிக் கொடுத்தன. அந்தப் படிக்கட்டுகளின் வழியாக நான் பாதாளத்துக்குள் இறங்கினேன். எகிப்தில் தேவனால் விடப்பட்ட காரிருள் எப்படியிருந்ததோ அவ்வண்ணமாக பாதாளத்தில் காரிருள் இருப்பதை நான் கண்டேன். சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த மக்களையும் நான் இங்கே கண்டேன். பாதாளத்துக்குள் நான் 2 வாரங்கள் தங்கியிருந்து இன்னும் அதிகமான சாத்தானின் வல்லமையைப் பெற்றுக் கொண்டு நான் வெளி உலகத்துக்கு வந்தேன். இப்பொழுது மக்கள் என்னை மிகவும் இளமையாகவும் ஏதுமறியா பாலகனாகவும் நினைத்துக் கொண்டனர். அந்தோ நான் எப்படிப்பட்ட கொடிய பாதகன், நான் எத்தனை ஆபத்தானவன் என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த உலகில் வாழும் அப்பாவி மக்களுக்கு தீங்கு செய்வதற்காக என்போன்ற ஏராளமான பேர் இந்த உலத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இயேசுவில் வாழும் மக்களுக்கு இந்த கொடியவர்களிடமிருந்து நித்திய பாதுகாப்பு உண்டு.

சமுத்திர ராணியோடு எனது உடன்படிக்கை

ஒரு நாள் மாலை நேரம் நான் ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்தபோது ஏபுட் மெட்டா பேருந்து நிலையத்துக்கு அருகில் ரஸ்தா ஓரமாக ஒரு அழகான பெண் நின்று கொண்டிருந்தாள். நான் அவளிடத்தில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அடுத்த நாள் மாலை நேரமும் அந்தப் பெண்

அதே இடமத்திலேயே நின்று கொண்டிருந்தாள். மூன்றாவது நாளும் அந்தப் பெண் அந்த இடத்தில் காணப்பட்டாள். நான் அவளைக் கடந்து சென்றபோது அவள் என்னைக் கூப்பிட்டாள். நான் அவளண்டை சென்று நான்தான் இம்மானுவேல் ஆமோஸ் என்று என்னை அவளுக்கு அறிமுகப்படுத்தினேன். ஆனால் அவள் தன்னை யார் என்று எனக்கு அறிமுகப்படுத்த மறுத்து விட்டாள். நான் அவளது பெயரையும் இருப்பிடத்தையும் கேட்டேன். அவள் அதற்குப் பதில் கூறாமல் சிரித்து மழுப்பிவிட்டாள். ஆனால் அவள் எனது முகவரியைக் கேட்டாள். நான் அவளுக்கு எனது முகவரியைக் கொடாமல் என்னுடைய தெருப் பெயரை மாத்திரம் கூறினேன். நான் அவளைவிட்டுப் பிரிந்து செல்லும் நேரம் அவள் என்னைப்பார்த்து தான் எப்படியும் என்னைச் சந்திக்க வருவதாகக் கூறினாள். அவள் என்னை எப்படி சந்திக்க முடியும் நிச்சயமாக முடியாது. நான் அவளுக்கு எனது வீட்டு நம்பரைக் கொடுக்கவில்லையே என்று நான் நினைத்தேன். ஆனால் அவளது வார்த்தையின்படி ஒரு நாள் சரியாக எனது வீட்டைக் கண்டு பிடித்து வந்து கதவைத் தட்டிக் கொண்டு நின்றாள் நான் அவளை உள்ளே அழைத்து உபசரித்தேன். இத்தனை அழகான பெண் இப்படி நம்மை வந்து பார்க்க வந்திருக்கின்றாளே என்று நான் என் உள்ளத்தில் அதிகமாக யோசித்தேன். இதன் பின்னர் அவள் என்னை ஒழுங்காக வந்து பார்த்துச் சென்றாள், எங்களிருவரிடமும் எந்த ஒரு மாம்ச இச்சையின் நட்பு உருவாகவில்லை. ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல நான் எந்த ஒரு பெண்ணையும் தொடாதவாறு சாத்தானின் ஆவி உலகம் என்னைத் தடுத்துவிட்டது. அந்தவித எண்ணங்களும் என்னிலிருந்து அறுபட்டுவிட்டது அந்தப் பெண் ஒவ்வொரு தடவையும் என்னை சரியான ஒரு நேரத்தில் ஒரு நிமிட நேரம் கூட முந்தாமலும், பிந்தாமலும் என்னை வந்து சந்தித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியான அவளது பகல் சந்திப்புகள் பின்னர் இராச்சந்திப்புகளாக மாற்றம் அடைந்தது. அதின் பின்னர் அவள்

ராக்காலங்களிலேயே என்னண்டை வந்து கொண்டிருந்தாள். ான் உன்னை எத்தனையோ தடவைகள் வந்து சந்தித்துவிட்டேன். இனி கட்டாயம் ஒரு நாள் என்னண்டை வரவேண்டும் என்று அவள் என்னை வருந்திக் கேட்டுக் கொண்டாள். ஒரு நாள் ரவு வழக்கம்போல என்னைச் சந்திக்க வந்த அவள் என்னுடைய ட்டிலேயே இருந்துவிட்டாள். அடுத்த நாள் காலை 8 மணிக்கு ாங்கள் அவளுடைய இடத்திற்குப் போகப் புறப்பட்டோம். நாங்கள் பருந்தில் ஏறினோம். அவள் டிரைவரிடம் தன்னை கடற்கரை ரத்திலுள்ள பார்பீச் என்ற இடத்தில் இறக்கிவிடும்படியாக கேட்டுக் காண்டாள். நாங்க்ள சமுத்திரக்கரையில் இறங்கியதும் நாம் எங்கே ாகின்றோம்? என்று நான் அவளிடத்தில் கேட்டேன் நீ அதைக் றித்து கவலை கொள்ள வேண்டாம். நீ என்னுடைய வீட்டிற்கு ந்து கொண்டிருக்கின்றாய் என்று அவள் கூறினாள். அவள் ன்னை சமுத்திரக் கரையின் ஒரு ஒதுக்கமான இடத்திற்கு ழைத்துச் சென்றாள். பின்னர் ரப்பர் பெல்ட் போன்ற ஒன்றை டுத்து என்னையும் அவளையும் ஒன்றாகக் கட்டினாள். வ்வளவுதான், எங்களுக்குப் பின்னாலிருந்து வந்த பிசாசின் க்தி ஒன்று எங்கள் இருவரையும் சமுத்திரத்துக்கு நேராக ள்ளிவிட்டது. இப்பொழுது நாங்கள் இருவரும் சமுத்திர லத்திக்கு மேலாக அதை ஒட்டியவாறே விரைந்து பறந்து போய்க் காண்டிருந்தோம். நாங்கள் நடுச் சமுத்திரத்தில் வெகு ாலைவுக்கு வந்துவிட்டோம்.

வாசிப்போனே, இந்தச் சம்பவம் எனது மாம்சப்பிரகாரமான ரத்தில் மாத்திரம் நடந்தது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது ரு குறிப்பிட்ட தூரம் வந்ததும் நாங்கள் இருவரும் சமுத்திர லத்துக்குள்ளே போய்விட்டோம். அப்படியே நாங்கள் விசாலமான ஸ்தாவில் நடந்து சென்று கொண்டிருந்தோம். நாங்கள் அப்படியே ந்து தங்கள் தங்கள் வேலைகளில் கண்ணும் கருத்துமாகவும், த்திர அவசரமாகவும் ஈடுபட்டிருக்கும் ஒரு ஜனப் பெருக்கமான ட்டணத்துக்குள் வந்து சேர்ந்தோம்.

சீயோன் →		தூதர்கள் படைப்பு ஆராதனை ஏசே-28:12 ஏசா-14:13, 6:1-2 **1**				
புதிய எருசலேம் பரலோகம் சங்-48:2 →						
வானாதி வானம் (பரதீஸ்) →						
ஆதி வானம் →			ஏசா-14:12 சாத்தான் விழுகை			
ஆகாய விரிவாகிய வானம் →				**4** ஆதி-1:6-8 ஆகாயவிரிவ வானமண்டலத்திலுள்ள ஆவிகளின் சேனைகள்		
↑ இடங்கள் ↓ காலங்கள் யுகங்கள்	1 அநாதி காலம்	2 தூதர்களின் காலம்	3 அறியப்படாத காலம்	4 சீர்திருத்த காலம்	5 குற்றமில்லாத காலம்	
பூமியின் முதல் நிலை →		**2** ஏசே-28:13 தூதர்கள் இருப்பிடம் ஏதேன்				
பூமியின் இரண்டாம் நிலை →			**3** பூமி ஒழுங்கின்மை ஆதி 1:2			
பூமிக்குள் →						
பாதாளம்			அகாதமான பாதாளம் ஏசா-14:15			
நரகம் →						



தேவசிங்காசனம்
சங்-93:2
சீயோன் புதிய
எருசலேம் பரலோகம்
எபி-4:14
மத்-25:34
வானாதிவானம்
உபா-10:14
புதிய வானம்
வெளி-21:1
கொரி-15:40
...த்தில்
...ந்தம்
...வளி-
...2:7
8
காலம்
9
அந்திகிறிஸ்துவின் காலம்
10
ஆயிர வருட அரசாட்சி காலம்
11
சாத்தானின் விடுதலை காலம்
நியாயத்தீர்ப்பின் நாள்
வலதுபக்கம் பரிசுத்தவான்கள்
இடதுபக்கம் பாவிகள்
மத்-25:31-46
12
நித்திய நித்திய காலம்
புதியபூமி
வெளி-21:1
1கொரி-15:40
5
அர்மகெதோன் யுத்தம் வெளி-20:3,7-8
...ல்
...-12:9
7
சாத்தான் விடுதலை
வெளி-20:3,7-8
கோகு மாகோகு யுத்தம்
யூதா1:6
வெளி-20:8,9
...க் 16:19-31
...க் 16:26
சங் 86:13
6
சாத்தான் பாதாளத்தில்
வெளி20:2
சாத்தான் நரகத்தில்
வெளி-20:10
8
நித்திய நரகம்
வெளி-20:15

ஆவி உலகம்

அந்த பட்டணத்தில் நான் விஞ்ஞான தொழிற் கூடங்களைக் போன்ற பெரிய பரிசோதனைக்கூடங்களையும், பொருட்களை வடிவமைக்கும் தொழில்நுட்பச்சாலைகளையும் ஒரு தியேட்டரையும் கண்டேன். அந்தப் பட்டணத்திற்குப் பின்புறமாக அழகான இளம் பெண்களையும், அழகான இளம் வாலிபர்களையும் நான் கண்டேன். எந்த ஒரு வயோதிபனும், பாட்டிமாரும் அங்கு தென்படவே இல்லை. அவள் என்னை அவர்களுக்கு அறிமுகப் படுத்தினாள் அவர்கள் எல்லாரும் என்னை வாழ்த்தி வரவேற்றனர். அந்தப்பட்டணத்தின் பல இடங்களுக்கும் என்னை அழைத்துச் சென்று காண்பித்தின் பின்னர் அவள் தனது வாழ்விடமான சொகுசுமாளிகைக்கு கூட்டிச் சென்றாள். அங்கு சென்றதும் அவள் எனக்கு முன்பாக தரையில் அமர்ந்து கீழ்க்கண்டவாறு கூறினாள்

• நான்தான் சமுத்திர ராணி (கடல் அரசி). நான் உன்னுடன் சேர்ந்து செல்வத்தையும் அது சம்பந்தப்பட்ட யாவையும் தருகின்றேன். நான் உனக்குப் பாதுகாவலையும் உன்னைக் காப்பதற்காக ஒரு பாதுகாவலின் ஆவியையும் தருகின்றேன் என்று சொன்னாள்.

அவள் ஒரு பொத்தானை அழுத்தவும் மனித சரீரம் துண்டு துண்டாக வெட்டி வைக்கப்பட்ட ஒரு தாலம் எங்களுக்கு முன்பாக வந்தது. நாங்கள் இருவரும் அவைகளைச் சாப்பிட்டோம். இந்தச் சமயம் அவள் ஒரு மலைப் பாம்பை எங்களுக்கு முன்பாகத் தோன்றப்பண்ணி அதைச் சாப்பிடும்படியாக என்னைக் கேட்டாள் அதைச் சாப்பிட என்னால் முடியாது என்று நான் அவளுக்குப் பதிற் கூறினேன். நான் அதைச் சாப்பிடும்படியாக அவள் தொடர்ந்து என்னை வற்புறுத்தி வந்தாள். உயிருள்ள ஒரு பெரிய மலைப் பாம்பை நான் எவ்விதமாக உண்ண முடியும் என்று நான் அவளிடம் சொன்னேன். இந்த வேளை அவள் தனது மந்திர சக்தியைப் பயன்படுத்தவும் நான் அந்த பெரிய மலைப் பாம்பை உயிரோடேயே விழுங்கி முடித்தேன்.

அவளுடைய விருப்பப்படி நான் அவளுடைய எல்லாக் காரியங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதாக நான் அவளுக்கு வாக்கு கொடுத்தேன். எனது வாக்குகளுக்கு பரிசாக அவள் எனக்கு நான் எனது மன விருப்பம் போல எதையும் தாக்கி அழிக்கக் கூடிய வல்லமையையும் மற்றவர்களைக் கொல்லக் கூடிய வல்லமையையும் அவள் எனக்குத் தந்ததுடன் வேறு சில வல்லமைகளையும் தந்தாள். மாத்திரமல்ல, எனக்கு ஆகாரம் தேவைப்படும்பொழுதெல்லாம் அந்த ஆகாரங்களை சமுத்திரத்திலிருந்து எனக்கு அனுப்பி வைப்பதாக வாக்களித்தாள். சமுத்திரத்திலுள்ள எந்த ஒரு ஜீவ ஜெந்துவாக நான் மாறிக் கொள்ள விரும்புவேனோ அந்த கடல் வாழ்பிராணியாக நான் மாறிக்கொள்ள அவள் எனக்கு சக்தியைக் கொடுத்தாள். அதின்படி நான் ஒரு கடல்வாழ் முதலையாக மாறி ஒரு வாரம் அந்தக் கடல் ராணியுடன் இருந்துவிட்டு பூமிக்கு வந்து சேர்ந்தேன். நான் நேராக லாகோஸ் பட்டணம் சென்று அங்குள்ள எனது வீட்டிற்குப் போனேன்.

சமுத்திரத்திலுள்ள பரிசோதனைக் கூடங்கள்

நான் லாகோஸ் பட்டணத்தில் ஒரு வாரம் இருந்துவிட்டு திரும்பவும் சமுத்திரத்திற்குச் சென்றேன். இந்தத் தடவை நான் சமுத்திரத்தில் 2 மாதங்கள் தங்கினேன். நான் விஞ்ஞான தொழிற்கூடங்களுக்குச் சென்று அங்கு என்ன நடக்கின்றது என்பதைக் கவனித்தேன். அங்கு விஞ்ஞானிகள் தீவிரமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதை நான் காண முடிந்தது. இந்த விஞ்ஞானிகள் மனுமக்களுடைய மனதை மயக்கக் கூடிய பொருட்களையும், விநோதமான கார்களையும், நவீன ஆயுதங்களையும் வடிவமைத்துக் கொண்டிருந்தனர். நான் மற்றொரு ஆராய்ச்சி சாலைக்குச் சென்றேன். அங்கே விதவிதமான அழகான துணிகள், நறுமணப் பொருட்கள்; மானிட சரீரத்தை அலங்கரிக்கக் கூடிய பற்பலவிதமான வாசனை திரவியங்கள் போன்றவற்றையும், மனிதனை அவனது சிருஷ்டிகராம் சர்வவல்லமையுள்ள

தேவனிடமிருந்து நித்தியமாக பிரிக்கக்கூடிய சாதனங்களு வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுவதை நான் ஆச்சரியத்துட கவனித்தேன். எலக்ட்ரானிக் பொருட்கள், கம்பியூட்டர்க தொலைக்காட்சி பெட்டிகள் எல்லாம் அங்கே பிரமிக்கத்தக் வடிவங்களில் உருவாக்கப்படுவதை நான் பார்த்தேன்.

அங்குள்ள சோதனைக் கூடம் ஒன்றில் ஒரு அதிசயமா டி.வி. பெட்டி இருக்கின்றது. அதின் உதவியால் அங்குள் சாத்தானின் கையாட்கள் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களையு உண்மைக் கிறிஸ்தவர்களையும், வெறுமனே ஆலயம் சென் மனந்திரும்பாமல் தங்களைத்தாங்களே திருப்தி செய்து கொண் பாவத்தில் வாழும் மாய்மால கிறிஸ்தவர்களையும் துலாம்பரமா ஆராய்ந்து அறிந்து கொண்டிருப்பதை நான் கண் அதிர்ச்சியடைந்தேன்.

சாத்தானுடனான எனது முதல் சந்திப்பு

நான் லாகோஸ் பட்டணத்துக்கு வந்து 2 வார காலம் எனது தொழில்களைச் செய்துவிட்டுத் திரும்பவும் சமுத்திர ராணியண்டை சென்றேன். இப்பொழுது அவள் தனது முதல் பணியை எனக்குக் கொடுத்தாள். என்னுடைய பெற்றோரைக் கொன்ற மந்திரவாதியான எனது அங்கிளைக் கொன்று வரவேண்டுமென்பதே அவளது கட்டளை. அப்படியே நான் எனது கிராமத்திற்குச் சென்று எனது அங்கிளைக் கொல்ல விரும்பியும் என்னால் அவரைக் கொல்ல இயலவில்லை. காரணம், நான் இதற்கு முன்னர் எந்த ஒரு கொலையும் செய்யாததால் அவரைக் கொல்லப் பயந்தேன். ஆனால் அவர் தனது மந்திரத் தொழிலை திரும்பவும் செய்து பணம் சம்பாதிக்க முடியாதவாறு அவரது தொழிலை நான் நாசப்படுத்திபிட்டு வந்து விட்டேன்.

நான் செய்த காரியத்தை திரும்பவும் வந்து சமுத்திர ராணியண்டை சொன்னபோது அவள் கடுங் கோபம் கொண்டாள். எனக்கு கீழ்ப்படியாமல் போனதற்காக நீ கட்டாயம் கொல்லப்பட்டே

ஆக வேண்டும். ஆனால் நான் உன்னை அதிகமாக நேசிப்பதால் இந்த ஒரு தடவை மட்டும் உன்னை மன்னிக்கின்றேன் என்றாள். திரும்பவும் அவள் என்னை எனது கிராமத்திற்கு அனுப்பி எனது பெற்றோரைக் கொல்லுவதற்கு உதவிக் கரம் நீட்டிய 2 கிறிஸ்தவ மூப்பர்களைக் கொன்று வரும்படியாக அனுப்பினாள். அவளுடைய உத்தரவுப்படி நான் அவர்களைக் கொன்று அவர்களது இரத்தத்தை சமுத்திர ராணிக்கு அனுப்பி வைத்தேன்.

இந்த நாட்கள் ஒன்றில் நீனா என்றழைக்கப்படும் ஒரு அழகான பெண் என்னண்டை வந்தாள். அவள் சமுத்திர ராணியுடன் கடல் அடிமட்டசாத்தானின் ஆவி உலகத்தில் வசிப்பவளாவாள். அவள் சமுத்திர ராணியின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான ஒரு உடன் வேலையாள் ஆவாள். அவள் மிகவும் கொடியவள். கிறிஸ்தவர்களை அவள் மிகவும் கடுமையாக வெறுத்தாள். கிறிஸ்தவர்களை வேர் அறுக்க எதுவரை வேண்டுமானாலும் அவள் செல்லத்தயாராயிருந்தாள். சமுத்திர ராணியின் தூண்டுதலின் பேரில் ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதற்காக அவள் பூமிக்கு வந்திருந்தாள். தனது பணி முடிவுற்றதும் அவள் கடலுக்குச் செல்லவிருந்த சமயம் நானும் அவளுடைய சேர்ந்து சமுத்திர ஆவி உலகத்திற்குப் போனோம். லூசிபர் சாத்தானின் மகா நாடு சீக்கிரமாகவே நடக்கவிருப்பதை அங்கு அறிந்த நான் அதில் கலந்து கொள்ளுவதற்காகத் தாமதித்திருந்து அவனது மகாநாட்டிற்குச் சென்றேன். மாட்சத்திலிருந்து தேவனாகிய கர்த்தரால் தலை கீழாகத் தள்ளப்பட்ட சாத்தானாம் லூசிபரை நான் சந்திப்பது இதுவேதான் முதல் தடவையாகும். சாத்தான் அந்த மகாநாட்டிற்கு வந்திருந்தோருக்கு கொடுத்த அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் கவனியுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு எதிராக உங்கள் முழு பலத்தோடும் யுத்தம் செய்யுங்கள். அவிசுவாசிகளோடு நமக்கு யுத்தம் வேண்டாம். அவர்கள் ஏற்கெனவே நம்முடைய

உண்மையான குடிமக்கள். அதை அவன் சொன்னபோது எங்கள் கூட்டத்திலிருந்து ஒருவர் கிறிஸ்தவ விசுவாசிகளோடு நாம் ஏன் யுத்த செய்ய வேண்டும்? என்று சாத்தானைப் பார்த்துக் கேட்டார் அதற்கான காரணங்களை அவன் இப்படியாகச் சொன்னான்.

தேவன் அவனை அந்த இடத்திலிருந்து தள்ளிவிட்டார் என்றும் (சாத்தான் தனது பேச்சு முழுவதிலும் மோட்சம் என்ற வார்த்தையை ஒருக்காலும் உச்சரிக்காமல் அந்த இடம் என்றே குறிப்பிட்டு வந்தான். மோட்சம் என்ற வார்த்தை வரும் இடங்களில் எல்லாம் அந்த இடம் என்றே கூறினான்.) அந்த இடத்திற்குத் தான் எந்த ஒரு கிறிஸ்தவனையும் செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறினான். மாய்மாலக் கிறிஸ்தவர்களோடு உங்களுக்குச் சண்டை வேண்டாம் அவர்கள் எனது சாயலைக் கொண்ட என்னுடையவர்கள். அவன் தனது பேச்சை மேலும் தொடர்ந்தான். தனது பொற காலம் நெருங்கி வருவதால் எப்போதும் இல்லாத அளவிற்கு கிறிஸ்தவ விசுவாசிகளோடு கடுமையான யுத்தம் செய்து அவர்களில் ஒருவராகிலும் அந்த இடத்திற்குச் சென்றுவிடாதபடிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எங்களைப் பார்த்துச் சொன்னான்.

அப்பொழுது எங்கள் கூட்டத்திலிருந்து ஒரு நபர் தேவன் மனுக்குலத்தை மீட்டுத் திரும்பவும் அவர்களைத் தம்மண்டை சேர்ப்பதற்காக யாரோ ஒருவரை அனுப்பினதாக நாங்கள் கேள்விப்பட்டோமே என்று கூறவும் யார் அந்த ஆள் என்று சாத்தான் திருப்பிக் கேட்கவும் எங்கள் அங்கத்தினர்களில் மற்றொருவர் 'இயேசு' என்று பதில் சொல்லவும், நாங்கள் எல்லாரும் ஆச்சரியத்தால் பிரமிக்கும் வண்ணமாக லூசிபராம் சாத்தான் தனது ஆசனத்திலிருந்து திடீரென்று தரையிலே சாய்ந்து வீழ்ந்தான். பின்னர் அவன் பூமியிலிருந்து எழுந்து அந்தப் பெயரைத் திரும்பவுமாக தனது கூட்டங்கள் எதிலும் உச்சரிக்கக் கூடாது என்றும், தவறும் பட்சத்தில் அந்த நபர் கொல்லப்படுவான் என்றும் மிகுந்த சத்தமிட்டான். உண்மையைத்தான் அவன் சொன்னான்

இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி (பிலி 2:10) என்ற தேவனுடைய வார்த்தையில் சாத்தானுடைய பெயரும் சேர்ந்து தானே இருக்கின்றது.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் சாத்தான் தனது மகாநாட்டிற்கு வந்திருந்த தனது அங்கத்தினர்களை உற்சாகப்படுத்திப் பேசி கிறிஸ்தவர்களைக் குறித்து கவலைப்படவேண்டாமென்றும், தான் தனது ராஜ்யத்தை இந்த உலகத்திலே சீக்கிரம் ஸ்தாபிக்கப் போவதாகவும், அந்த அரசாட்சியிலே தனது குடிகளாகிய எங்களை எல்லாம் உலகத்தை ஆளுகின்ற ஆட்சியாளர்களாக நியமிக்கப் போவதாகவும், மற்ற உலக மக்களைப் போல நாங்கள் கஷ்டமடையத் தேவை இல்லையென்றும் சொன்னான்.

மனுமக்கள் எப்பொழுதும் கவர்ச்சிகரமான ஆடம்பரப் பொருட்களையும், பகட்டான காரியங்களையுமே விரும்புகிறவர் களானதால் அந்தவிதமான பொருட்களையே ஏராளமாக உற்பத்தி செய்து அவர்களுக்கு அவைகளைக் கொடுத்து அந்தப் பொருட்களிலேயே அவர்கள் தங்கள் விலையேறப்பெற்ற காலத்தையும் நேரத்தையும் செலவிட்டுவிட்டு தங்கள் சிருஷ்டிகராம் தேவனோடு ஒரு நிமிட நேரம் கூட ஜெபத்தில் செலவிடாமல் இருக்கக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அத்துடன் (1) பணம் (2) நிலபுலங்கள் (3) விபச்சாரம், வேசித்தனம் (4) பலவிதமான பெருமைகள் (5) மாய்மாலங்கள் போன்றவைகளை கிறிஸ்தவர்களுக்கு வாரி வழங்கி திருச்சபையை அழித்து நாசம் செய்யும்படியாகவும் எங்களைக் கேட்டுக் கொண்டான்.

இதுவேதான் லூசிபர் சாத்தானுடனான எனது முதலாம் சந்திப்பு ஆகும். அதின் பின்னர் பல தடவைகளிலும் நான்

அவனைச் சந்தித்திருக்கின்றேன். மேற்கண்ட எனதுமுதல் சந்திப்புக்குப் பின்னர் சமுத்திரராணி என்னைத் தனது மாளிகைக்கு அழைத்து மனுஷ எலும்புகளின் சாம்பலையும் இதர பொருட்களையும் எனது இரு கால்களுக்குள்ளும் செலுத்தினாள். ஒரு கல்லை (சாதாரணக் கல் அல்ல) எனது விரல் ஒன்றுக்குள் பிரவேசிக்கச் செய்தாள். வேறு எதையோ ஒன்றை எனது வலது கையின் எலும்புக்குள்ளாக அனுப்பினாள்.

இந்தப் பொருட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியங்களைச் செய்யும் ஆற்றல் கொண்டது. எனது விரலில் செலுத்தப்பட்டக் கல்லில் உதவியால் எனக்கு விரோதமாக தங்கள் நெஞ்சில் நினைவு கொள்ளும் எந்த மனிதனுடைய நினைவையும் நான் அறிந்து கொள்ளுவேன். எனது வலது கை எலும்புகளுக்குள்ளாக செலுத்தப்பட்ட பொருளின் உதவியால் நான் அழிக்க நினைக்கும் எதையும் அழிக்ககூடிய ஆற்றல் எனக்குக் கிடைத்தது. எனது இரு கால்களுக்குள்ளும் கடல் ராணி செலுத்திய மனுஷ எலும்புகளின் சாம்பல் என்னை மிகவும் கடின நெஞ்சுள்ளவனாகவும், இரக்கமற்றவனாகவும், கொடியவனாகவும் மாற்றினதுடன் எனது மனித உருவத்தைப் பெண்ணின் ரூபமாகவும், நான் விரும்பும் எந்த ஒரு மிருகம், பறவையாகவும் நான் மாற்றிக் கொள்ள எனக்கு சக்தியை அளித்தது.

கடல் ராணி தனது ஆராய்ச்சிக் கூடம் ஒன்றினுக்குள் என்னை அழைத்துச் சென்று எனக்கு ஒரு தொலை நோக்குக் கண்ணாடி, ஒரு டி.வி., ஒரு வீடியோ ஆகிய மூன்றையும் கொடுத்தாள். இவைகள் எல்லாம் சாதாரண பொருட்கள் என்று நீங்கள் நினைத்துவிடவேண்டாம். இந்தக் கருவிகளின் உதவியால் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களையும், ஆலயத்துக்குச் செல்லுபவர்களையும், ஆலயத்தில் என்ன நடக்கின்றது என்பதையும் நான் திட்டமும் தெளிவுமாகக் கண்டுபிடித்து அவர்களுடைய ஆத்துமாக்களை நஷ்டப்படுத்துவதற்கான மாற்றுக் காரியங்களை வெற்றியோடு செய்ய அவைக்ள் எனக்கு உதவி

செய்யும். அத்துடன் கடல் ராணி எனக்கு 16 பெண்களையும் எனது உதவிக்காக கொடுத்தாள். அவர்களில் முன்பு நான் குறிப்பிட்ட கொடிய நீனாவும் ஒருத்தியாவாள். இந்தப் பெண்கள் யாவரும் தேவ மக்களுக்கு எதிராக போரிட்டு வெற்றி காண்பதில் கை தேர்ந்தவர்களாவார்கள்.

கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக சாத்தான் எவ்வாறு யுத்தம் செய்கின்றான்?

கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுங்கள் என்று தலைவன் லூசிபரிடமிருந்து எங்களுக்குக் கட்டளை கிடைத்ததும் அவனுடைய உண்மையுள்ள பிரதிநிதிகளாகிய நாங்கள் ஒன்று கூடி அதற்கான திட்டத்தை தயாரித்தோம். அந்தத் திட்டங்கள் இதுதான்:

1. கிறிஸ்தவர்களுக்கு வியாதிகளைக் கொடுப்பது.
2. அவர்களில் பெண்களுக்கு மலட்டுத் தன்மையைக் கொடுப்பது.
3. தேவனை ஆராதிக்கும் சபைகளில் நித்திரை மயக்கத்தை உண்டாக்குவது.
4. சபைகளில் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவது
5. கர்த்தருடைய காரியங்களில் நிர்விசாரத்தை உருவாக்குவது.
6. தேவனுடைய வார்த்தைகளைக் குறித்த அறியாமையை உண்டாக்குவது.
7. கிறிஸ்தவ மக்கள் தங்கள் அருமையான வாழ்நாட் காலத்தை தேவையற்ற காரியங்களில் பாழாக்கச் செய்வது.
8. கிறிஸ்தவர்களுடன் நேருக்கு நேர் மோதுவது.

கிறிஸ்தவர்களுடன் நேருக்கு நேர் மோதித் தாக்குவது

கடல் ராணி எனக்குத் தந்த தொலைக் காட்சி பெட்டியின் உதவியால் மறுபடியும் பிறந்த கிறிஸ்வர்களை நான் பார்ப்பேன். மாய்மாலம் செய்யும் பெயர்க் கிறிஸ்தவர்களுடன் நாங்கள் போரிடுவதில்லை. அவர்கள் ஏற்கெனவே எங்களுடையவர்களாக முத்திரை குத்தப் பட்டவர்களாவார்கள். நாங்கள் எங்களுடைய பெண் மக்களை பெரிய ஆலயங்களுக்குள் அனுப்புவோம். அவர்கள் அங்கு சென்று ஆலயத்திற்கு கொண்டு வரப்படும் குழந்தைகளை அழ வைத்து ஆலயத்தில் பிரசங்கியாரால் கொடுக்கப்படும் தேவச் செய்திகளை கேட்கவிடாமல் அவர்களுடைய கவனத்தை திசை திருப்புவார்கள் அத்துடன் ஆண்டவருடைய வார்த்தைகள் கவனிக்க விடாமல் கன நித்திரை மயக்கத்தின் ஆவியை எங்கள் பெண்கள் அவர்களுக்குக் கொடுப்பார்கள்.

ஒரு வேளை ஆலயத்தில் தேவ செய்தியைக் கேட்டு தங்கள் உள்ளத்தில் மனஸ்தாபப்பட்டு ஒரு பரிசுத்த மாற்றத்தோடு யாராகிலும் வெளி வருகின்றார்கள் என்பதை அறிந்த எங்கள் பெண்கள் அவர்களுடைய பரிசுத்த கவனத்தை அவர்களிடமிருந்து திசை திருப்பி அவர்களை அவர்களுடைய பழைய பாவ நிலைக்கு கொண்டு வர அவர்களை ஆலய வளாகத்திலேயே சந்தித்து அவர்களை வாயார வாழ்த்தி வரவேற்று மற்ற உலக காரியங்களை அவர்களிடம் பேசி அவர்கள் ஆலயத்தில் கேட்டு அவர்களுடைய உள்ளங்களில் கிரியை செய்து கொண்டிருக்கும் தேவனுடைய சத்தியத்தை அவர்கள் முற்றுமாக மறந்து போகும்படியாக செய்வார்கள்.

ஜீவனுள்ள கிறிஸ்தவ சபைகளில் உள்ள மக்கள் தேவனுடைய வார்த்தைகளை வாசித்து தியானிக்க விடாதவாறு அவர்களை சோர்விற்க்கும், சோம்பலுக்கும் வழிநடத்தி தேவனுடைய மாறாத வாக்குத்தத்தங்களையும், அவைகளின் மேலுள்ள அவர்களுடைய அதிகாரங்களையும் குறித்த

அவிசுவாசத்தையும், அறியாமையையும் உருவாக்கி அவர்களை இருட்டடிப்பு செய்து அவர்களை நிர்ப்பந்தர்களாக்குவதும் எங்கள் சிங்காரப் பெண்களின் பணியேயாகும். சபையிலே வாக்குவாதங்களையும், சண்டைகளையும், குழறுபடிகளையும் ஏற்படுத்துவதும் எங்கள் பெண்கள்தான்.

மெய்யான தேவ மக்கள் எப்படி அடையாளம் கண்டு பிடிக்கப்படுகின்றனர்

ஒரு மெய்யான மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனை அடையாளம் கண்டு கொள்ளுவது என்பது அவர்கள் தங்கள் சபைகளுக்கு எடுத்துச் செல்லும் பெரிய பெரிய வேதாகமங்களை கொண்டல்ல. அவர்களின் இருதயத்தில் மிகவும் பிரகாசமாக எரியும் மெழுகுவர்த்தி போன்ற ஒரு வெளிச்சத்தையோ அல்லது அவர்களுடைய தலைக்கு மேலாக வட்டம் போன்ற பிரகாசமான ஒளி வளையத்தாலோ அல்லது அவர்களைச் சுற்றியிருக்கும் அக்கினி மதிலாலேயே எங்கள் ஆவி உலகத்தில் மெய் கிறிஸ்தவ மக்களை திட்டமாக அடையாளம் காண்கின்றோம். அந்த பரிசுத்த தேவ மக்கள் வழியில் நடந்து செல்லும் போது அவர்களோடு தேவ தூதர்களும் நடந்து செல்லுவதை நாங்கள் பார்க்கின்றோம். ஆம், அவர்களின் வலப்பக்கம் ஒரு தேவ தூதனும், இடது கைப்பக்கம் ஒரு தூதனும் அவர்களுக்குப் பின்னாக ஒரு தேவ தூதனும் அவர்களோடு செல்லுகின்றனர். இந்த அரணிப்பான வளையம் நாங்கள் அந்த ஆத்துமாவை நெருங்கவிடாதபடி செய்து விடுகின்றது.

அந்த ஆத்துமாவை நாங்கள் மேற்கொண்டு வெற்றி கொள்ள வேண்டுமானால் நாங்கள் செய்யக்கூடியதெல்லாம் அந்த ஆத்துமாவை எந்த விதத்திலும் பாவத்தில் சிக்க வைப்பதுதான். பாவத்தில் அதை விழ வைத்துவிட்டல் நாங்கள் எளிதாக உள்ளே நுழைந்துவிடுவோம். ஒரு மெய்யான தேவனுடைய பிள்ளையை நாங்கள் அணுகி அதற்கு தீங்கு செய்யும்படியாக நாங்கள் அதினண்டை சென்றால் அது ஒருக்காலும் தனிமையாக

இருப்பதை நாங்கள் காண்பதில்லை. அந்த தேவ பிள்ளைக்கு பாதுகாவலாக ஒரு தேவதூதன் எப்பொழுதும் அதின் அருகிலேயே நின்று கொண்டிருப்பான். ஆ!தேவன் தங்களுடன் இவ்விதமாக இருப்பதை ஒரு கிறிஸ்தவன் அறிந்து உணரும் பட்சத்தில் அவர்கள் பாவஞ் செய்யவோ, அல்லது ஆவிக்குரிய விழிப்பின்றி கவலையீனமாக ஏனோ தானோவென்று வாழவோ ஒருக்காலும் முடியாது.

கிறிஸ்தவர்களை பின்மாற்றக்காரர்களாக மாற்றுவது

லூசிபர் என்னை அக்கிராசனபதியாக வைத்த பின்னர் நான் எங்களுடைய பெண்களை ஜீவனுள்ள சபைகளின் ஆராதனை களுக்குள்ளும், ஜெப ஐக்கியங்களுக்குள்ளும் அனுப்பினேன். இந்தப் பெண்கள் தங்களை வெகு சிங்காரமாக அலங்கரித்து கொண்டு சபைகளுக்குள் நுழைவார்கள். இந்தப் பெண்கள் தனித்துக் காணப்படாவிட்டாலும் சபையின் பெண்களின் ஆவிகளோடு தங்களை ஒன்றரக் கலந்து கொண்டு விடுவார்கள். சபையின் பாஸ்டர் அல்லது பிரசங்கியார் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தோர் முன் எழுந்து வரும்படியாக அழைப்புக் கொடுக்கும்போது எங்கள் பெண்களும் பாசாங்கு செய்து கொண்டு தங்களை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்திருப்பதாகவும் தங்களுக்காக ஜெபிக்க வேண்டுமென்றும் மேடையை நோக்கி முன் செல்லுவார்கள். கூட்டம் முடிவுற்றதும் அவர்கள் பிரசங்கியாரை சந்திக்க ஆவலாக காத்திருப்பார்கள். தன்னைச் சந்திக்கக் காத்திருக்கும் எங்கள் அலங்காரவாசிகளைக் கண்டதும் பிரசங்கியார் சொக்கிப் போவார். தங்களுடைய ஆவிக்குரிய சந்தேகங்களை தெளிவுபடுத்த வேண்டுமென்ற வார்த்தைகளோடு எங்கள் பெண்கள் பிரசங்கியாரை தொடர்ந்து சென்று அவருடன் வீட்டிற்குச் செல்லுவார்கள் பிரசங்கியார் தன்னைத் தொடர்ந்து

வரும் பெண்கள்யாரென்று தனது ஆவிக்குள்ளாக நிதானிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் அவரை மயக்கி தங்கள் கண்ணியில் விழவைத்து அவரை விபச்சாரம், வேசித்தனத்திற்கு வழிநடத்திச் சென்றுவிடுவார்கள். எங்கள் பெண்ணை பிரசங்கியார் மாம்ச இச்சையோடு பார்த்த மாத்திரத்திலேயே அவருடைய ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டுவிடும். படிப்படியாக கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியாரிடமிருந்து விலகிச் சென்றுவிடுவார். எங்களுடைய திட்டம் பூரணமாக வெற்றி பெற்றுவிடும்.

இந்த இடத்தில் நான் உங்களுக்கு ஒரு தேவ ஊழியரைக் குறித்து சாட்சி கூற விரும்புகின்றேன். எங்களுடைய ஆவி உலகத்தில் நாங்கள் அவரை ஒரு தேவனுடைய மனிதனாக அடையாளம் கண்டோம். அவர் தனது முழங்கால்களை தேவ சமூகத்தில் முடக்கும்போது எங்கள் ஆவி உலகமே பெருங்குழப்பத்துக்குள்ளாகி நடுநடுங்கும். எனவே நாங்கள் எங்கள் பெண்களை அவரைச் சந்திக்கும்படியாக அனுப்பினோம். ஆனால், ஆச்சரியமான காரியம் என்னவெனில் இந்த தேவனுடைய மனிதர் எங்களுடைய பெண்களுக்கு நன்றாக ஆகாரம் கொடுத்து அனுப்பி வைத்தாரே தவிர அவர்கள் போடட மாம்ச இச்சைகளின் கண்ணியில் சிக்கவில்லை. அதின் காரணமாக, அந்தப் பெண்கள் எங்கள் ஆவி உலகத்தால் கொல்லப்பட்டனர். அதின் பின்னர் நாங்கள் மிகவும் சாமர்த்தியசாலியான ஒரு பெண்ணை அவரண்டை அனுப்பி வைத்தோம். அவள் தனது செய்கைளாலும், தேன் ஒழுகும் பேச்சுகளினாலும் அவரை மாய வலையில் வீழ்த்த தன்னாலானமட்டும் பிரயாசம் எடுத்தாள். ஆனால் அவளுடைய தந்திரங்கள் கொஞ்சம் கூட அவரிடம் பலிக்காமல் அவளும் வெறுங்கையாகத் திரும்பினாள்.

லூசிபரின் அக்கிராசனபதியாகிய எனக்கு இது மிகவும் அவமானமான காரியமானதால் நான் அந்த தேவ மனிதரை சரீர பிரகாரமாக கொல்லுவதற்கு முடிவெடுத்தேன். இந்த தேவ மனிதர்

ஒடுக்பே என்ற இடத்திலுள்ள சந்தையில் ஏதோ ஒரு பொருளை வாங்குவதற்காக குனிந்து கொண்டிருந்தார். நான் உடனே அந்த வழியாக ரஸ்தாவில் எண்ணெய்ப்பீப்பாய்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த ஒரு வாகனத்தை அவர்மேல் மோதவிட்டேன். அந்த வாகனம் ஒரு உயர் மின் அழுத்த கம்பத்தில் மோதி சாய்ந்தது. அதில் கொஞ்சப் பேர் கொல்லப்பட்டனர். ஆனால் அந்த தேவ மனிதர் உயிர் தப்பிவிட்டார். அவர் எப்படித்தப்பினார் என்பது ஒரு அதிசயமான காரியம்தான். அடுத்த தடவை அவர் ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். உடனே அவ்வழியாக வந்து கொண்டிருந்த ஒரு ராணுவ லாரிவை அவர் மேல் மோதும்படியாக நான் ஏவினேன். அந்த லாரி நேராக அங்கிருந்த கல்லறைத் தோட்ட ரஸ்தாவில் தாறுமாறாக ஓடி அநேகரைக் கொன்றது. அதிலும் அந்த தேவ மனிதர் உயிர் தப்பிவிட்டார். அதின் பின்னர் அவரைக் கொல்லும் முயற்சி கைவிடப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட தேவ மனிதரை கொல்லுவதற்காக பிசாசானவன் மற்ற அநேக மக்களைக் கொல்லுவான். எப்படியும் அவரை கொன்றுவிடலாம் என்பது அவனது உள்ளத்தின் அபிப்பிராயம். ஆனால், அவன் எப்பொழுதும் தோல்வியையே அடைவான் என்பதில் சந்தேகமே கிடையாது. இப்படியான சந்தர்ப்பங்கள் மெய்யான தேவ மக்கள் பலருக்கும் அவர்களை அறியாமலே இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. அவர்களுடைய ஜீவனுள்ள தேவன் அவர்களை எப்பொழுதும் பாதுகாத்துவிடுகின்றார்

தேவனோடு அவரது அன்பில் வழிநடந்து வரும் மெய்யான தேவப்பிள்ளையை சாத்தான் எத்தனை தடவை முயற்சித்தாலும் அந்த தேவ பிள்ளையை கொல்ல அவனால் கூடாது. ஆனால், அவிசுவாசிகளையும், தேவனைவிட்டு விலகி பாவத்தில் ஜீவிப்போரையும் அவன் பந்தாடிவிடுவான்.

விசுவாசியின் சர்வாயுதவர்க்கங்கள்

ஒரு விசுவாசியின் சர்வாயாதவர்க்கங்கள் (1) இயேசுவின் நாமம் (2) இயேசுவின் இரத்தம் (3) தேவனுடைய வார்த்தை (4) துதி ஸ்தோத்திரங்கள் ஆகும். கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள் (எபே 6: 10-11) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் (வெளி 12:11)

இயேசு என்ற நமது ஆண்டவருடைய நாமத்தில் வல்லமையுள்ளதென்று நீங்கள் திட்டமாக உணர்ந்து கொள்ளுங்கள். அப்படியே அவருடைய இரத்தத்திலும் வல்லமையுண்டு. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி 1:10/11) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

இயேசு என்ற நாமம் எப்பொழுதும் உங்கள் உதடுகளில் இருக்கட்டும். இயேசுவின் நாமமும், இயேசுவின் இரத்தமும் சாத்தானுடைய சர்வ திட்டங்களையும் சிதறப்பண்ணக் கூடியது. உண்மையில், சாத்தான் அவனது பிரதிநிதிகளின் கொடிய தந்திரத் திட்டங்களை அழிக்கக் கூடிய மகா வல்லமை இவைகளுக்கு உண்டு. இரண்டாவதாக, நீங்கள் ஆண்டவரை நன்கு துதிக்கக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். துதித்தலில் வல்லமையுள்ளது. எரிகோவின் மிக வலுவான கோட்டை துதியால் விழுந்தது.

ஈப்பட் மெட்டா என்ற இடத்தில் ஒரு பாஸ்டர் இருந்தார்.

அங்கு அவருக்கு ஒரு சபை இருந்தது. அவரை நான் அடித்து வீழ்ந்த திட்டமிட்டேன். எனக்கு விருப்பமில்லாத கீழ்க்கண்ட காரியங்களை அவர் செய்து கொண்டிருந்தார்.

1. தினமும் அதிகாலையில் அவர் எழுந்து தனது கரங்களில் சிறிய ஒலி பெருக்கி கருவியை எடுத்துக் கொண்டு போய் தெருக்களில் ஆங்காங்கு நின்று பிரசங்கம் செய்வார். இந்தக் காரியம் எங்களது சமாதானத்தை மிகவும் குறைப்பதாக இருந்தது. அவர் பிரசிங்கிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் பிசாசுகளாகிய எங்களை கட்டவும் செய்தார்.

2. தன்னுடைய ஆலயத்தில் தனது பிரசங்கத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் எங்களது இருளின் கிரியைகளை அம்பலப்படுத்துவதுடன் எங்களது கூட்டத்தினரை அவர் கட்டுவார்.

3. அந்தப் பாஸ்டர் அதிகமாக ஜெபிப்பார்.

4. அவர் எப்பொழுதும் கர்த்தரைப் பாடித் துதித்துக் கொண்டேயிருப்பார்.

அவரைக் கொல்லுவதற்காக நான் எனது ஏவலாட்களை அனுப்பினேன். ஆனால் அவர்களால் அவரைக் கொல்ல முடியவில்லை. அதினால் நானே அந்த வேலையை செய்யத் தீர்மானித்தேன். அந்த குறிப்பிட்ட நாளில் அந்த பாஸ்டர் ஒரு ரஸ்தாவில் நடந்து சென்று கொண்டிருந்தார். ஒரு முக்கியமான காரியத்தை நான் உங்களுக்கு இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். நாங்கள் அவரைக் கொல்லுவதற்கு நெருங்குகின்ற ஒவ்வொறு சமயத்திலும் மேகஸ்தம்பம் அவரது வலது இடது கைப்பக்கங்களில் அவருடன் சென்று கொண்டேயிருக்கும். அதின் காரணமாக நாங்கள் அவரண்டை நெருங்குவது என்பது முற்றிலும் கூடாத காரியமாயிருந்தது. ஆனால் அந்த குறிப்பிட்ட நாளில் அநதவித மேகஸ்தம்பம் ஏதுவும் இல்லாத காரணத்தால் நான்

எனது காரியத்தை நிச்சயமாக வெற்றியோடு முடித்துவிடலாம் என்று நினைத்தேன்.

உடனே நான் மழைக்குக் கட்டளையிட்டேன். அந்த மழையுடன் இடிகளுக்குக் கட்டளையிட்டு இடியினால் நான் அவரைக் கொல்ல எண்ணினேன். அப்படியே இடிகள் விழ ஆரம்பித்தன. அந்த இடிகள் அருகிலிருந்த அநேக மரங்கள் நாசமாயின. இவைகளை எல்லாம் பார்த்த அந்த பாஸ்டர் ஆனந்தமாக ஆண்டவர் இயேசுவைத் துதித்துப் பாடத் தொடங்கினார். இயேசுவின் நாமத்தில் முழங்கால்கள் யாவும் முடங்கும் என்ற பல்லவியே அப்பொழுது அவரது உதடுகளிலிருந்து எழும்பிக் கொண்டே இருந்தது. இந்தப் பல்லவியை அவர் திரும்பத் திரும்ப பாடிக் கொண்டே இருந்தார் அவர் அதைத் தொடர்ந்து பாடவும் மழை நின்றது. இடி முழக்கங்களும் இல்லாது போயிற்று. அந்த நேரத்தில் தானே தங்கள் கரங்களில் மின்னும் சுடர் ஒளி பட்டயங்களை ஏந்தியவர்களாக இரண்டு தேவ தூதர்கள் அவரது வலது இடது பக்கங்களில் நின்று கொண்டிருப்பதை நான் கவனித்தேன். அந்த நேரத்தில் ஒரு பலத்த காற்று என்னைத் தூக்கிக் கொண்டு சென்று வேறொரு பட்டணத்தில் போட்டது. சொல்லப் போனால் நான் பெரிதும் குழப்பமுற்றேன். அந்தப் பாஸ்டர் தப்பிக் கொண்டார். அவருக்காக அவரது ஆண்டவர் யுத்தம் பண்ணுகிறதை அவர் முற்றும் அறியாதிருந்தார்.

ஒரு கர்த்தருடைய பிள்ளை முழுமையாக அதின் ஆண்டவருடைய பாதுகாப்புக்குள் இருக்கின்றது என்பதை நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது என்றால் அது முற்றிலும் உண்மை. அது அப்படியே நடக்கும்.

இரண்டாவது ஒரு சாட்சி நான் ஒரு கர்த்தருடைய பிள்ளையோடு ஒரு வாடகைக் காரில் அமர்ந்திருந்தேன். அந்தக் காரில் உள்ள அனைவருக்கும் அவர் கைப்பிரதிகளை ஆவியில் மிகுந்த வைராக்கியத்துடன் விநியோகித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு அவர் ஒரு பிரதியைக் கொடுத்தார். நான் அதை அவரிடமிருந்து வாங்க மறுத்துவிட்டேன். அதின் பின்னர் அவர் காரிலிருந்தவர்களுக்கு பிரசிங்கிக்கத் தொடங்கிவிட்டார். எனது அசுத்த ஆவிக்குள் குழப்பமடைந்த நான் எனது மோதிரக்கையால் ஓங்கி அவருக்கு ஒரு குத்து கொடுத்தேன். எனது பலத்த குத்தை வாங்கிய அவர் இயேசுவின் இரத்தம் என்று சத்தமிடவும் மின்னலும் நெருப்பும் ஏற்பட்டு ஒரு தேவ தூதன் காரில் தோன்றினான். அந்தக்கணமே ஒரு பலத்தக் காற்று எழும்பி என்னை ஆப்பிரிக்காவின் இருண்ட கானகம் ஒன்றினுக்குள் கொண்டு போய் போட்டுவிட்டது. சாத்தானின் ஆவிகள் எனது சார்பில் இருந்திராத பட்சத்தில் நான் அந்த பாதை தெரியாததும், கொடிய கானக விலங்குகள் நிறைந்ததுமான அந்தக் கருங்கானகத்திலிருந்து வெளிவருவது முற்றும் கூடாத காரியமாகப் போயிருக்கும். அந்த கர்த்தருடைய பிள்ளைக்கு ஆதரவாக கர்த்தர் யுத்தம் செய்ததை அவரும் அவரோடு கூட இருந்த மற்ற பயணிகளும் அந்த நேரம் அறியாதிருந்தனர். அவர்கள் அறிந்ததெல்லாம் நான் எப்படியோ மறைந்து போய்விட்டேன் என்பது மட்டுமே.

தனது வாயில் இயேசுவின் இரத்தம் அல்லது இயேசுவின் நாமம் வார்த்தைகளை உச்சரிக்கும் எந்த ஒரு விசுவாசியும் அக்கினியை அனுப்புகின்றான் என்பதை மறந்துவிடக் கூடாது. கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான் (நீதி 18:10) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது.

அந்தோணியின் தொழிற்பட்டறையில் நடந்த ஆவிக்குரிய போராட்டம்

1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாங்கள் எங்களது வழக்கமான சாத்தானின் கூட்டத்தை சமுத்திரத்தில் முடித்த பின்னர் ரிவர்ஸ் மாநிலத்திலுள்ள போர்ட் ஹர்கோர்ட்டுக்குச் என்ற இடத்திலுள்ள கர்லஞ்சென்ற எனது அங்கிளின் மனைவியைச் சந்திக்க தீர்மானித்தேன்.

அதின்படி நான் போர்ட் ஹார்கோர்ட்டுக்குச் சென்றேன். அங்கு அந்தோணி என்றழைக்கப்படும் ஒரு தேவ ஊழியரைச் சந்தித்தேன். அவர் அங்கு ஒரு தொழில் பட்டறை வைத்திருந்தார். அவர் தன்னை வந்து நான் பார்க்கும்படியாக என்னை அழைத்திருந்தார். யார் அழைத்தாலும் அந்த அழைப்பை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது எங்களது சாத்தானின் சபையின் ஒரு தீர்மானம் ஆகும். அந்த வாரத்தின் ஒரு வியாழக் கிழமை நண்பகலுக்கு சற்று பிந்திய நேரம் நான் அவரைப் பார்க்கப் போனேன். நான் அவரிடத்தில் போகவும் அவர் என்னைப் பார்த்து உங்களுக்குக் கொடுக்கும்படியாக தேவனிடமிருந்து ஒரு செய்தி உண்டு என்று கூறினார். அவர் தனது வேதாகமத்தை எடுத்து வந்து நீண்ட நேரமாக எனக்குப் பிரசங்கம் செய்து கொண்டே இருந்தார். அவரோடு மூன்று கிறிஸ்தவர்களும் (1 ஆண் 2 பெண்கள்) அங்கிருந்தனர். அவர் பேசிய எல்லாவற்றையும் நான் கவனிக்கவில்லை என்று நான் திட்டமாக உங்களுக்குக் கூற முடியும். இறுதியாக அந்தோணி என்னை முழங்கால்படியிடும்படி சொன்னார். அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நான் முழங்காலூன்றினேன். அவர் உடனே ஜெபிக்க ஆரம்பித்தார். அந்தக் கணமே தேவ ஆவியானவர் நான் தரையிலே அந்த விழும்படியாக என்னைத் தாக்கினர் நான் மல்லாங்காய் தரையிலே விழுந்தேன் அதின் பின்னர் நான் எப்படியோ சுதாகரித்து எழுந்து ஒரு இரும்புக்கம்பத்தைப் போல ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று என்னில் உண்டான பிசாசின் வல்லமையால் நான் அந்தோணியின் தொழில் பட்டறையில் கிடந்த இரும்பு நாற்காலிகளை எல்லாம் உடைத்தேன்.

நான் வெளியே பார்த்த போது எங்கள் சாத்தானின் ஆவி உலகத்தினைச் சேர்ந்த மூன்று நபர்கள், ஒரு மனிதரும் இரண்டு பெண்களும் வெளியே வந்து நின்று கொண்டிருப்பதை நான் கவனித்தேன். அவர்கள் மனித உருவில் அங்கு வந்து நின்று கொண்டிருந்தனர் எப்படியாவது அந்தோணியின் அறையினுள்

நுழைந்து விடலாம் என்று அவர்கள் முயற்சித்த போதினும் அறையின் உள்ளே இருந்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமையானது அவர்களை உள்ளே வர முடியாதபடி தடுத்து நிறுத்திவிட்டது.

அந்தோணியின் தொழில் பட்டறையில் நடந்த காரியத்துக்கான ஆபத்து மணி சமுத்திரத்தின் அடியில் உள்ளசாத்தானின் ஆவி உலகத்தில் ஒலித்திருக்க வேண்டும். அங்கிருக்கும் டி.வி. மூலமாக அவர்கள் பார்த்தபோது என்னை மீட்பதற்காக ஒரு திறமையில்லாத குழுவை அனுப்பியிருந்தார்கள் என்பதை நான் திட்டவட்டமாகக் கண்டு கொண்டேன்.

அந்தோணியும் அவருடன் இருந்த கிறிஸ்தவ மனிதரும் என்னை தரையோடு தரையாக வைத்துக் கொண்டிருக்க அங்கிருந்த கிறிஸ்தவப் பெண்கள் பிசாசுகளைக்கட்டி எனக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். இயேசுவை நான் விசுவாசிக்கின்றேனா என்று அவர்கள் என்னைப் பார்த்து கேட்டார்கள். நான் அதற்கு இல்லையென்று பதில் அளித்தேன். இயேசு என்ற பெயரை உச்சரிக்கும்படியாக அவர்கள் என்னைக் கேட்டார்கள். அதற்கு நான் மறுத்துவிட்டேன். எனது பெயரைக் கேட்டார்கள். நான் எனது பெயரைச் சொன்னேன். பின்னர் அவர்கள் என்னை அனுப்பிவிட்டனர். எந்த ஒரு சாத்தானின் ஆவியையும் என்னிலிருந்து அவர்களால் துரத்த இயலாமற் போயிற்று. எனவே நான் எப்படி அந்தோணியின் தொழில் பட்டறைக்கு வந்தேனோ அவ்வாறே வெளியே புறப்பட்டுப் போனேன்.

ஆலயத்தில் நடந்த போராட்டங்கள்

அடுத்து வந்த நாள் வெள்ளிக் கிழமையானதால் தங்களுடைய ஆலயத்தின் காத்திருப்புக் கூட்டத்திற்கு கூட்டத்திற்கு வரும்படியாக அந்தோணி என்னை அழைத்தார். அவருடைய அந்த அழைப்பையும் நான் தைரியமாக ஏற்றுக் கொண்டேன்.

ஆலயத்தின் ஆராதனையில் கலந்து கொண்டு அங்கு கூடி வரும் மக்களுக்கு தூக்க மயக்கத்தின் ஆவியைக் கொடுத்து ஆராதனையை பயனற்றதாக ஆக்குவது எங்களுடைய பணிகளில் பிரதானமான ஒன்றுதானே!

பாடல் பல்லவிகளுடன் விழிப்பு ஆரம்பமானது. நானும் உற்சாகமாக கரங்களைத் தட்டிப் பாடினேன். இந்தப் பாடல் பல்லவிகளின் நடுவில் ஒரு சிறப்பு பாடற் குழு இயேசுவின் நாமத்தைத் தவிர மற்ற எல்லா நாமங்களிலும் வல்லமை இல்லை என்று பாடினது. அதைக் கேட்ட நான் வாய்விட்டே சிரித்துவிட்டேன். நான் ஏன் சிரித்தேன் என்று நினைக்கின்றீர்களா? எனக்குள்ளாக இருக்கும் சாத்தானின் ஆவியின் மூலமாக நான் சபையினரைப் பார்த்த போது சபை மக்களில் 75 சதவீத மக்கள் தங்கள் பாவங்களில் துணிந்து வாழ்வதை நான் கவனித்தேன். இப்படி தங்கள் பாவங்களில் வாழ்ந்து கொண்டு ஆண்டவரைப் பாடித் துதிப்பவர்கள் சத்துருவாகிய பிசாசின் தாக்குதலுக்கு எந்த நேரமும் இலக்கானவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து எந்த ஒரு பாவங்களும் தங்கள் வாழ்வில் அணுகாதபடி தங்களைப் பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும்.

அந்த ஆராதனையில் என்னுடன் சமுத்திரத்தின் சாத்தானுடைய ஆவி உலகத்திலிருந்து வந்த மூவரும் கூட கலந்து கொண்டனர். நாங்கள் நால்வரும் எங்கள் குரல்களை எழுப்பி எங்கள் கரங்களை பலமாகத் தட்டிப் பாடினோம். இந்த இடத்தில் நான் ஒரு முக்கியமான காரியத்தை குறிப்பிட விரும்புகின்றேன். ஒரு ஆலய ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்பாக அந்த ஆராதனையில் பங்கு பெறும் மக்கள் தங்கள் பாவங்களை தேவனுக்கு முன்பாக உத்தமமான இருதயத்தோடு அறிக்கையிட்டு அதின் பின்னர் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை ஆண்டவரை நன்கு துதித்து ஸ்தோத்தரிக்க வேண்டும். இப்படிச் செய்வதால்

சாத்தானின் கிரியைகளை நாம் கட்டுவது மாத்தரமல்ல, ஆலய ஆராதனையை பயனற்றதாக்குவதற்காக உள்ளே நுழையக்கூடிய சாத்தானின் ஏவலாட்களையும் நாம் தடுத்து நிறுத்திவிடுகின்றோம்.

ஆனால் இந்த குறிப்பிட்ட ஆராதனையில் நாங்கள் நால்வரும் மிகவும் சௌகரியமாக நிம்மதியாக அமா்ந்து கொண்டோம். நிம்மதியாக நாங்கள் அமா்ந்தது மாத்திரமல்ல எங்கள் கை வேலைகளையும் துரிதமாக காட்டத் தொடங்கினோம். ஆராதனைக்கு வந்தோா் பலா் தூங்கிவிழ ஆரம்பித்தனா். அத்துடன் பாடல் பல்லவிகளையும் கருத்தில்லாமல் உற்சாகமிழந்து பாடினாா்கள்.

ஏற்கெனவே அந்தோணி என்னிடம் சொல்லியிருந்த வண்ணமாக விடியற்காலை 2 மணிக்கெல்லாம் எனக்காக ஜெபிப்பதற்காக என்னை அவா் மேடைக்கு அழைத்தாா். நான் மேடைக்கு வந்ததும் இயேசுவின் இரத்தததை பரிந்து மன்றாடி எனது விடுதலைக்காக அழைப்பதை நான் கவனித்தேன். உடனே நான் அவரிடம் இயேசுவின் இரத்தத்தை நீங்கள் பரிந்து அழைப்பதால் எந்த ஒரு பரிகாரமும் எனக்கு கிட்டப் போவதில்லை. நான் ஒரு கொடிய கொலைகார சங்கத்தின் அங்கத்தினன். உங்களால் முடிந்தால் என்னை விடுவியுங்கள். அப்பொழுது நான் முழுங்கால்படியிடுகின்றேன் என்று சொன்னேன். இந்த வாா்த்தைகளை நான் அந்தோணியிடம் கூற வேண்டும் என்று நான் முன்கூட்டியே திட்டமிட்டுப் பேசவில்லை. உண்மைதான், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பிசாசுகளை பயமுறுத்தும், விசுவாசிகளைப் பாதுக்காக்கும். ஆனால் அது சாத்தானை கட்டி வைக்காது. சாத்தானைக் கட்ட வேண்டுமானால் கிறிஸ்தவன் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவனைப் புறப்பட்டு போகும்படியாக இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுக்க வேண்டும்.

நான் சொன்ன் வாா்த்தைகளுக்கு இணங்கினதினால் நான் முழங்காலூன்றினேன். அந்தச் சமயத்தில் ஒரு சகோதரி ஆவியில்

நிறைந்து மிகுந்த சத்தமாக "உங்களுக்குத் தகுதியில்லாத பட்சத்தில் ஜெபிக்க வரவேண்டாம்" என்று கூறினார்கள். அவர்களுடைய வார்த்தையை கூட்டத்தில் இருந்தோர் எத்தனைபேர் புரிந்து கொண்டார்களோ எனக்குத் தெரியாது. பாவத்தில் வாழ்ந்து கொண்டு பிசாசுகளைத் துரத்த ஒருக்காலும் முயற்சித்து விடாதேயுங்கள். அது மகா ஆபத்தானது.

மேற்கண்ட சகோதரியின் வார்த்தைகளைக் கேட்ட அநேகர் எனக்காக ஜெபிக்க மேடைக்கு வரவில்லை. ஜெபிக்கும்படியாக மேடைக்கு வந்த சிலர் இயேசுவின் நாமத்தில் என்ற வார்த்தையை உச்சரித்த மாத்திரத்தில் எனக்குள்ளாக இருந்த பிசாசுகள் தங்களுக்குள்ளாக கொந்தளித்துக் குமுறுவதை நான் கண்டேன். அக்கணமே நான் தரையில் விழுந்தேன். என்னில் வாழ்ந்து கொண்டிருந்த பறக்கும் பிசாசு உடனடியாகப் போரில் இறங்கிற்று. இந்தப் பறக்கும் பிசாசு பிடித்த மக்கள் மிகவும் பொல்லாதவர்களும், ஆபத்துமானவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நான் எனது நெஞ்சை பூமியில் வைத்த வண்ணமாக படுத்த நிலையில் ஆலயத்துக்குள் தரைமட்டத்தில் பறந்தேன். என்னிலிருந்து புறப்பட்ட அசுத்த ஆவி ஒன்று ஆலயத்துக்கு வந்திருந்த ஒரு கிறிஸ்தவ வாலிபனைப் பிடித்துக் கொண்டது. அதினால் அவனும் போராடத் தொடங்கினான். அவன் எனக்கு ஆதரவாளனாக என்னுடன் சேர்ந்து சபை மக்களை அடிக்கவும், துன்புறுத்தவும் என்னுடைய சார்பில் போரிடுகிறவனாகவும் காணப்பட்டான். அதைக் கண்ட சபை மக்கள் பலர் பயந்து அலறி அடித்துக் கொண்டு ஆலயத்தில் பாஸ்டருடைய அறைக்குள் ஓடிக் சென்று ஒளித்துக் கொண்டனர். ஆலயத்துக்கு வந்த தேவ பிள்ளைகளில் பலசாலிகள் என்னைப் பிடித்து அடக்கி கட்டுக்குள் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆவியில் நிறைந்து எனக்காக ஜெபம்பண்ணி கடைசியில் எனக்குள் இருக்கும் பிசாசுகளின் பெயர்களைச் சொல்லச் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பதில் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தேன். நான் நீண்ட

நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தபடியால் அவர்களின் ஜெபங்களால் பிசாசுகளின் பிடிலிலிருந்து நான் பூரணமான விடுதலை பெற்று நல்லதோர் நிலையை அடைந்துவிட்டேன் என்று அவர்கள் தவறாக என்னைப் புரிந்து கொண்டு இறுதியாக எனக்காக ஜெபம் செய்து விழிப்பு ஆராதனையை ஸ்தோத்திரத்துடன் முடித்துவிட்டார்கள். அவர்கள் முழுமையாக ஏமாற்றப்பட்டுப் போனார்கள் என்பது அவர்களுக்கு கடும் போர் நடந்திருந்தும் எனது நிலையில் எந்த ஒரு மாறுதலும் ஏற்படாமல் நான் அப்படியேதான் இருந்தேன்.

நான் சரீரப் பிரகாரமாக மிகவும் களைப்பாக இருந்த காரணத்தால் என்னால் எழுந்து நடக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் நான் மெதுவாக எழுந்து ஆலயத்திலிருந்து புறப்பட்டு பிரதான ரஸ்தாவுக்கு வரவும் ஏதோ ஒன்று எனக்குள் நிகழ்வதை நான் கவனித்தேன். ஆலயத்தில் இருக்கும்போது என்னில் இருந்த களைப்பு, சோர்பு எல்லாம் நீங்கி இப்பொழுது நான் பழைய பெலசாலியாக மாற்றம் அடைந்தேன். என்னைவிட்டுச் சென்ற சில பிசாசுகள் திரும்பவும் என்னை ஆட்கொண்டுவிட்டது என்பதை என்னால் நன்றாகவே கண்டுகொள்ள முடிந்தது.

அதைத் தொடர்ந்து எனக்காக ஜெபித்த, என்னிலிருந்து பிசாசுகளைத் துரத்த முயன்ற அந்தோணியையும் ஆலயத்தின் மக்களையும் கடுமையாக பழி வாங்கிவிடுவது என்ற கொடிய எண்ணம் எனக்குள் உண்டாயிற்று. இந்த மக்கள் என்னை வெகுவாக அவமானப்படுத்தி விட்டனர். என்ற கசப்பின் எண்ணம் எனக்குள் ஏற்பட்டது. லாகோஸ் பட்டணம் சென்று மேலும் தீய ஆவிகளின் சத்தியைப் பெற்று வந்து இந்தக் காரியத்தை செய்துவிட வேண்டியது என்று நான் எனக்குள் திட்டமாக முடிவெடுத்தேன்.

லாகோஸ் பட்டணம் செல்லும் பாதையில் என் ஆண்டவர் குரல் கேட்டேன்

போர்ட்ஹார்கோர்ட்டிலுள்ள என்னுடைய அங்கிள் வீட்டிற்க்கு நான் வந்தபோது அங்கிருந்து நான் உடனடியாக லாகோஸ் பட்டணம் வீட்டிற்கு, செல்லப் போவதாக குடும்பத்தினரிடம் சொன்னேன். அவர்கள் தங்கள் வீட்டில் தாமதிக்கும்படியாக எவ்வளவோ சொல்லியும் நான் கேட்காமல் ஒரு வாடகைக் காரில் ஓனித்சா பட்டணத்துக்குப் போகலானேன். எனது முழுமையான நோக்கம் யாதெனில் ஓனித்சா பட்டணம் போய் அங்கிருந்த எனது நண்பன் ஒருவனை சந்தித்துவிட்டு அப்படியே லோகோஸ பட்டணம் செல்ல வேண்டும் என்பதே. மூன்றாம் மைல் என்ற இடத்திலிருந்து நான் வாடகைக் காரில் ஏறி ஓமாக்வே என்ற இடத்திற்கு அருகிலுள்ள சர்வதேச விமான தளத்தின் சந்திப்புக்கு நாங்கள் வந்தபோது எனது சுதேசி பாஷையில் நிகம் என்று என்னை அழைக்கும் குரலைக் கேட்டு வாடகைக் காரில் என்னோடிருந்தவர்களை சுற்றும் முற்றும் பார்த்தேன்.

என்னைக் கூப்பிட்டது யாராக இருக்க முடியும்? காலஞ் சென்ற எனது அருமைத் தாயாரைத் தவிர இந்தப் பெயரால் என்னை அழைக்கக் கூடியவர்கள் எவருமே கிடையாது. சாத்தானின் ஆவி உலகத்திலுள்ளோருக்குக் கூட இம்மானுவேல் ஆமோஸ் என்ற எனது பெயரைத் தவிர இந்தப் பெயர் தெரியாது. என்னை அழைத்த பெயரைக் குறித்து நான் எனக்குள்ளாக அதிசயித்துக் கொண்டிருக்கும் வேளையில் தானே நிகம், என்னை மறுதலிக்க மறுபடியும் போகின்றாயா? என்ற வார்த்தை என்னை நோக்கி வருவதை நான் கேட்டேன். அதைக் கேட்ட சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பயங்கரமான காய்ச்சல் என்னைத் தாக்கினது. எனது உடலில் ஏற்பட்ட அந்த பயங்கர காய்ச்சலின் வெப்பத்தை எனக்கு அருகில் வாடகைக் காரில் உட்கார்ந்திருந்த மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவர்களில் ஒருவர்

நண்பரே, நீங்கள் மூன்றாம் மைலில் வாடகைக் காரில் ஏறினபொழுது நல்ல சுமாகத்தானே இருந்தீர்கள்? என்று கேட்டார். உண்மைதான் நான் அங்கு எனது பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு தலைவலி கூட எனக்குக் கிடையாது என்று நான் அந்த மனிதரிடம் சொன்னேன்.

எங்கள் வாடகைக் கார் ஒவேரி என்ற இடத்திலுள்ள உமுக்பாவுக்கு வந்து கொண்டிருந்தபோது நான் எனது அகோரக் காய்ச்சலால் நிலை குலைந்து காருக்குள்ளேயே சாய்ந்து விழுந்துவிட்டேன். அதற்கப்பால் நடந்தது என்னவெனில், நல்ல வாட்டசாட்டமான இரு உயரமான மனிதர்கள் என்னைத் தூக்கிச் செல்ல வந்தனர். அவர்களில் ஒருவர் எனது வலது கை புஜத்தையும் மற்றவர் எனது இடது கைப் புஜத்தையும் பிடித்து தூக்கினவர்களாக என்னைக் கொண்டு சென்றனர். அவர்கள் என்னிடத்தில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மிகவும் கரடு முரடானதும், உடைந்த கூர்மையான கண்ணாடித் துண்டுகள் நிறைந்த பாதை வழியாக அவர்கள் என்னைக் கூட்டிச் சென்றனர். அவைகள் எல்லாம் எனது கால்களைக் குத்திக்காயப்படுத்தி இரத்தக் களறியாக்கியது. அப்பொழுது நான் சத்தமிட்டுக் கதறி அழுது கூக்குரலிட்டேன். எனது அழுகுரல்களுக்கெல்லாம் அவர்கள் செவி சாய்க்காமல் மிகவும் மௌனமாகவே அந்த இரு மனிதரும் என்னுடன் எனது புஜங்களைப் பிடித்தவர்களாக வந்து கொண்டிருந்தனர். நாங்கள் மூவரும் வழி நடந்து ஒரு நல்ல பெரும் பாதைக்கு வந்து சேர்ந்தோம். அந்தப் பெரும் பாதைக்கு நாங்கள் வந்தபோது அந்த இரு மனிதரும் தங்கள் வாயைத் திறந்து நீ தேடப்பட்டு வந்த ஒரு மனிதன் (YOU ARE A WANTED MAN) என்று கூறினார்கள். நாங்கள் தொடர்ந்து நடந்து வந்தோம் நாங்கள் மிகவும் விசாலமானதும், மிகவும் நீளமானதுமான ஒரு மணி மண்டபத்துக்குள் பிரவேசித்தோம். நாங்கள் சற்று மேடு ஏறி அந்த மண்டபத்துக்குள் நுழைந்த சில விநாடிகளுக்குள்ளாக "அவனை உள்ளே கொண்டு வாருங்கள்" என்ற ஒரு குரல் தொனித்தது. அவர்கள் என்னை உள்ளே கொண்டு வந்து விட்டதும்

மறைந்துவிட்டனர். அந்த விசாலமான மணி மண்டபத்துக்குள் நான் கண்டதைக் குறித்து உங்களிடம் விவரித்துக் கூறுவது மிகவும் கடினமான காரியமாகும். எனினும் என்னால் முடிந்த அளவுக்கு அதைக் கூறுகின்றேன்.

நான் கண்ட அந்த மணி மண்டபம் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த மண்டபம் மிகவும் விசாலமானதும், வெகு நீண்டதுமாக இருந்தமையால் அதின் வழியாக நடந்த மையப்பகுதிக்கு வந்தபோது கடை முனையில் ஒரு கிராதியையும், சந்திரனும் நட்சத்திரங்களும் சூரியனைச் சுற்றி பிரகாசிப்பதையும் கண்டேன். அங்கே ஒரு சிங்காசனத்தையும், சூரியனைப் போன்ற கண்களைக் கூசச் செய்யும் வஸ்திரத்தை அணிந்தவராக ஒரு அழகு சௌந்தரியவானையும் அந்த சிங்காசனத்தில் நான் பார்த்தேன். சிங்காசனத்திலிருந்த அந்த சௌந்தரிய புருஷன் வா என்று என்னை அழைப்பதை நான் கேட்டு அவருடைய குரலுக்கு அடிபணிந்தவனாக முன் செல்ல முயன்றேன். அவருடைய ஜோதிமயமான, கண்களைக் கூசச் செய்யும் ஒளிப் பிரளயம் நான் முன் செல்லவிடாமல் என்னைத் தடுத்துடன் நான் ஒரு அடி எடுத்து வைத்தால் அடுத்த அடி எடுத்து வைக்க இயலாதவனாக நான் தடுமாறி விழுந்தேன். திரும்பவும் நான் முன்னேற முயற்சிப்பேன், ஆனால் மறுபடியும் மறுபடியும் நான் விழுந்தேன்.

திடீரென நான் கண்ட சந்திரன் நான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு மேலாக நகர்ந்து வருவதை நான் கவனித்தேன். அந்த சந்திரன் ஒரு உலுக்கு உலுக்கியது. அவ்வளவுதான், எனது மாம்ச பிரகாரமான எனது சரீரம் ஒரு வஸ்திரத்தைப் போல என்னைவிட்டு அகற்றப்பட்டதை நான் கண்டேன். இப்பொழுது நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். என்னிலிருந்து அகற்றப்பட்ட எனது சரீரத்தை ஒரு வஸ்திரத்தை மடித்து வைப்பது போல அந்தக் கரங்கள் மடித்து ஒரு மூலையில் வைத்தது. அதின் பின்னர் அந்தச் சந்திரன் திரும்பவும் சிங்காசனத்தை நோக்கி பின் நோக்கிச்

சென்றுவிட்டது. சிங்காசனத்தில் அமர்ந்திருந்த ஒளிமய ரூபி என்னை "வா" என்று அழைப்பதை நான் கேட்டேன்.

அருமை இரட்சகர் இயேசுவை நான் தரிசித்தது

நான் அவரண்டை செல்லுவதற்காக கொஞ்ச தூரம் நடந்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரவும் அவர் தமது சிங்காசனத்திலிருந்து எழுந்து வந்து எனது கால்கள் ஒவ்வொன்றையும் கழற்றி அதினுள் எதையோ ஊற்றி கால்களை திரும்பவும் அதினதின் இடத்தில் பொருத்தி வைத்தார். அவ்வாறே அவர் எனது கைகளுக்கும் செய்தார். அந்த இடங்களில் எல்லாம் கடல் ராணிக்கு வல்லமைகள் இருந்தது. இந்த இடங்களிலெல்லாம் இப்படி வல்லமைகள் இருப்பதை அவர் எப்படி கண்டுபிடித்தார் என்பதைக் குறித்து நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். இதன் பின்னர் அவர் தமது சிங்காசனத்துக்கு திரும்பவும் சென்று அமர்ந்து என்னைத் தம்மண்டை வரும்படி அழைத்தார். நான் அவரண்டை சென்று கொண்டிருக்கும்போது எனது சரீரத்திலிருந்து சில பொருட்களும் என் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகளும் விழுந்தன.

நீ எங்கே போய்க் கொண்டிருக்கின்றாய்? என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் ஓனித்சா என்ற இடத்திலுள்ள எனது நண்பனைக் காண சென்று கொண்டிருக்கின்றேன் என்று நான் பதில் கொடுத்தேன்.

"உண்மைதான், ஆனால் நீ என்ன நோக்கத்தோடு அங்கு சென்று கொண்டிருக்கின்றாய்? என்ற உனது மனதில் எண்ணங்களை நான் உனக்கு வெளிப்படுத்துவவேன்" என்று அவர் என்னிடம் கூறினார். இதுவரைக்கும் இப்படியாகச் சொல்லும் அவர் யார் என்று நான் அறியாதபோதிலும் என்னிடமுள்ள சாத்தானின் சகல வல்லமைகளைக் காட்டிலும் அவருக்கு சர்வ

வல்லமை இருப்பதை நான் காண முடிந்தது.

அவர் என்னை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றார். அங்கே கரும் பலகை போன்ற ஒரு பொருள் இருப்பதை நான் பார்த்தேன். அதில் நான் கிறிஸ்தவர்களுக்கும், நான் இருந்த இடத்திலுள்ள கர்த்தருடைய சபைக்கும் செய்ய நினைத்து நான் திட்டமிட்டிருந்த எனது தீய செயல் திட்டங்கள் எல்லாம் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டேன். அவர் தமது கரங்களால் என்னைப் பற்றிப் பிடித்து சில காரியங்களை அவர் எனக்கு காண்பிக்கப் போவதாகக் கூறி அழைத்துச் சென்றார். போகும் வழியில் அவர் என்னைப் பார்த்து:-

"நீ அழிந்து போவதை நான் விரும்பவில்லை. நான் உன்னை இரட்சிக்க விரும்புகின்றேன். இது எனது கடைசி தருணம். நீ மனந்திரும்பி என்னண்டை வந்து எனக்கு ஊழியம் செய்யாத பட்சத்தில் நீ சாவாய். மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டோர் மற்றும் கீழ்ப்படியாதோர் வாசம்பண்ணுகின்ற இடங்களை நான் இப்பொழுது உனக்குக் காண்பிப்பேன்" என்று கூறினார். அவர் இந்த வார்த்தைகளை சொன்னதும் அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்பதை நான் திடடமும் தெளிவுமாகக் கண்டு கொண்டேன்.

ஜீவனுள்ள தேவன் எனக்குக் காண்பித்த வெளிப்பாடுகள்

நாங்கள் ஒரு அறைக்குள் பிரவேசித்தோம். அப்பொழுது அவர் ஒரு திரையைப் போன்றவற்றை விலக்கினார். அந்த திரைக்கு அப்பால் நான் முழு உலகத்தையும், அந்த உலக மக்கள் செய்து கொண்டிருக்கின்ற எல்லா காரியங்களையும் என்னால் காண முடிந்தது. கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர் அல்லாதாரும் செய்து கொண்டிருக்கும் அனைத்துச் செயல்களையும் நான் கண் கூடாகக் கண்டேன்.

நாங்கள் இரண்டாவது ஒரு அறைக்குள் சென்றோம்.

அங்கிருந்த ஒரு திரையை தேவன் நகர்த்திய போது மிகவும் பரிதாபகரமான காட்சியைப் பார்த்தேன். அவர்கள் எல்லாரும் கை விலங்கிடப்பட்டிருந்தனர். இந்த ஜனங்களை தேவன் மாய்மாலக்காரர்கள் என்று அழைத்ததை என்னால் கேட்க முடிந்தது. நியாயத் தீர்ப்பின் நாள் வரை இந்த மக்கள் இவ்வண்ணமாகவே விலங்கிடப்பட்டிருப்பார்கள் என்று கர்த்தருடைய குரல் தொடர்ந்து ஒலித்தது.

நாங்கள் மூன்றாவது ஒரு அறைக்குள் கடந்து சென்றோம். அங்கும் அவர் ஒரு திரையை விலக்கினார். அங்கு நான் கண்ட காட்சி, ஆனந்தப் பரவசக் காட்சியாகும். திரளான ஜனக்கூட்டம் வெள்ளை அங்கிகளை தரித்தவர்களாக ஆரவாரித்து ஆனந்தித்துக் கொண்டிருப்பதை நான் கண்டேன். இந்த தடவை நான் ஆண்டவரைப் பார்த்து "ஐயா, இவர்கள் யார்?" என்று கேட்டேன். தங்களுடைய பரம பிதாவின் பரலோக வெகுமானங்களை பெறுவதற்காக ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருக்கும் மீட்கப்பட்ட பரிசுத்த ஜனங்கள் என்று அவர் என்னிடம் கூறினார்.

அதின் பின்னர் நாங்கள் நான்காவது ஒரு அறைக்குச் சென்றோம். அங்கு நான் கண்ட காட்சி என்னை திகிலூட்டப்பண்ணுவதாகவும், பயந்து நடுநடுங்கப்பண்ணுவதாகவும் இருந்தது வாசிக்கும் அன்பரே. அங்கு நான் கண்ட பயங்கரமான காட்சியை மானிட வார்த்தைகளால் நான் இங்கு விவரிக்க இயலாதவனாக இருக்கின்றேன். ஒரு முழுப் பட்டணமே அக்கினியால் எரிந்து கொண்டிருப்பதை நான் கண்டேன். நரகம், நிச்சயமாகவும் மகா பயங்கரமாகவும் உள்ளது. இந்த உலகத்திலேயே மோட்சம், நரகத்தின் காரியங்கள் முடிவுற்று மனுஷன் இந்த உலகத்துடன் அழிந்து போகின்றான் என்று யாராகிலும் உங்களுக்கு சொன்னால் அதை நம்பி மோசம் போய்விடாதீர்கள். நிச்சயமான மோட்சமும், நிச்சயமான நரகமும் தப்பாமல் உள்ளது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களில் நரகத்தைக் குறித்து மக்களை அதிகமான

தடவைகளிலும் (56 தடவைகள்) வெகுவாக எச்சரித்திருக்கின்றார். நான் உங்களுக்குத் திரும்பவும் சொல்லுகின்றேன். நரகம் மறுக்க முடியாத உண்மையான இடம். அந்தப் பயங்கரமான இடத்தை எனது சொந்தக் கண்களாலேயே நான் பார்த்தேன். நான் ஆண்டவரிடம் "என் தகப்பனே இது என்ன" என்று கேட்டேன். அதற்கு அவர் மாறுத்தரமாக "சாத்தானுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும், எனது வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாதவர்களுக்காகவும் உலகத் தோற்ற முதல் ஆயத்தம் செய்யப்பட்டுள்ள இடம். அதின் பின்னர் பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும் விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்ற வெளிப்படுததின விசேஷம் வெளி 21:8 இல் காணப்படும் வசனத்தை விளம்பினார்.

நாங்கள் அடுத்த ஒரு அறைக்குச் சென்றோம். அங்குள்ள் ஒரு திரையை தேவன் விலக்கியபோது மாட்சிமையும், மகிமையும் பொருந்திய ஒரு இடத்தை நான் கண்டேன். அது ஒரு மலை உச்சியில் ஜொலித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது ஒரு மகிமையான பட்டணமாக இலங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பட்டணம் மகா விசாலமானதாகவும், அதின் தெருக்களெல்லாம் தங்கத்தால் தளவரிசைப்படுத்தப்பட்டதுமாக இருந்தது. அதின் கட்டிடங்களை பூவுலத்தில் உள்ள எந்த ஒரு கட்டிடத்துடனும் ஒப்பிட இயலாது. "இதுதான் பரிசுத்தவான்களின் ஆனந்த நம்பிக்கை. அந்த பேரின்ப வாசஸ்தலத்தில் நீயும் இருப்பாயோ ?" என்று தேவன் என்னிடம் கேட்டார். "ஆம் தகப்பனே, உமது கிருபை புண்ணியத்தால் நான் கட்டாயம் அங்கு உம்மோடு இருப்பேன்" என்று பதில் அளித்தேன்.

அதின் பின்னர் நாங்ள் தேவனுடைய சிங்காசனத்திற்குத் திரும்பினோம். அப்பொழுது தேவன் என்னைப் பார்த்து நான்

உனக்குச் செய்தவைகளையும், "நான் உனக்குச் காண்பித்தவைகளையும் சாட்சியாக எங்கும் போய் அறிவி" என்று சொன்னார்.

ஆண்டவர் என்னைத் திரும்பவுமாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு திரையை விலக்கினார். அப்பொழுது எனக்கு ஓனித்சா, லோகாஸ் பட்டணங்களில் நேரிடக் கூடிய காரியங்களையும், அவைகள் யாவிலுமிருந்து அவர் என்னைக் காத்துக் கொள்ளப் போவதையும் எனக்குக் காண்பித்தார். இதைத் காண்பித்த பிறகு "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்" என்று கூறி எனது கரத்தைப் பிடித்து என்னை அந்த விசாலமான மண்டபத்திலிருந்து வெளியே கொண்டு வந்து விட்ட பின்னர் நான் கண் விழித்தபோது முன்பின் தெரியாத ஒரு மனிதருடைய வீட்டின் அறையிலுள்ள ஒரு கட்டிலில் நான் படுத்திருப்பதை கண்டு சத்தமிட்டுக் கூச்சலிட்டேன். உடனே அந்த வீட்டின் கணவனும் மனைவியும் என்னன்டை வந்தார்கள் நான் ஏன் இங்கு படுத்திருக்கின்றேன்? என்று நான் அவர்களிடத்தில் கேட்டேன். அவர்கள் காரியத்தை விளக்கினார்கள்.

"நீங்கள் ஓனித்சாவுக்கு வாடகைக் காரில் சென்று கொண்டிருந்த சமயம் அந்தக் காருக்குள்ளேயே கடுமையான காய்ச்சலின் காரணமாக மயக்கமாகி விழுந்துவிட்டீர்கள். நீங்கள் சுய நினைவிழந்து இறுதியில் உங்கள் நிலை மகா மோசமாகிவிட்டது. நாங்கள் உங்களை ஓவேரி என்ற இடத்திலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிட்சை அளித்தோம். நீங்கள் உயிர் பிழைப்பதே அரிதான காரியமாக இருந்தது. உங்கள் நாடித் துடிப்பெல்லாம் நம்பிக்கையில்லாத அளவிற்குத் தளர்ந்துவிட்டது. பின்னர் தெய்வதீனமாக உங்கள் ஜீவன் உங்களுக்கு திரும்ப வந்தது மருத்துவரே அதிசயிக்கத்தக்க விதமாக நீங்கள் உயிர் பிழைத்தீர்கள் உங்களை எப்படி பொறுப்பெடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கிருந்து உங்களை எப்படி எங்கள் வீட்டிற்கு கொண்டு வந்து படுக்க வைத்தோம் என்பதெல்லாம் எங்களுக்கே.

இன்னும் புரியாத ஆச்சரியமான புதிர்களாக இருக்கின்றன" என்று கூறி எனது முகவரியை எல்லாம் வாங்கினார்கள். நான் அந்த அன்பான வீட்டிலே 2 நாட்கள் தங்கியிருந்து கடந்து சென்றேன். கர்த்தர் எனக்கு காண்பித்த காரியம் எதையும் நான் அவர்களுக்குச் சொல்லவில்லை.

நான் ஒரு வாடகைக் கார் பிடித்து லாகோஸ் பட்டணம் வந்து சேர்ந்தேன். அங்கு வந்த இரவிலேயே ஆண்டவர் என்னுடன் பேசி நான் லாகோஸ் பட்டணத்திலிருந்து அடுத்த நாள் காலையிலேயே முதற் காரியமாக புறப்பட்டுவிடவேண்டுமென்று கூறினார். சாத்தானின் பிரதிநிதி அலீசுடன் நான் வசமாக மாட்டிக்கொண்டு சாத்தானின் உடன் வேலையாளாக நான் மாறியது இந்தப் பட்டணத்தில்தான் என்பது உங்களுக்கு நன்கு நினைவிருக்கலாம்.

நான் அடிக்கடி எனக்குள்ளாக மகா கொடிய பாவியாகிய என்னை, அநேகரை சாத்தானின் உதவியால் கொன்ற கொலை பாதகனாகிய என்னை, சாத்தானின் ராஜ்யத்தில் அவனுடைய பிரதிநிதியாகவிருந்து அவனுடைய இருளின் சாம்ராஜ்யம் செழித்து வளர இராப் பகலாக பாடுபட்ட என் போன்ற துரோகியை தேவன் எப்படியாக இரட்சித்து தம்முடைய நித்திய பேரின்ப காணியாட்சிக்கு சுதந்திரவாளியாக்கினார் என்று யோசிப்பேன். அதற்கான விடையையும் நான் கண்டுபிடிக்கவே செய்தேன். ஆம், தேவன் அன்பாகவே இருக்கின்றார். அந்த மூன்று எழுத்துக்கள்தான் அதற்கான பதில். உண்மையாகவே தேவன் அன்புள்ளவர்.

முடிவாக என்ன?

ஆவியும் மணவாட்டியும் வா என்கின்றார்கள், கேட்கிறவனும் வா என்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி 22:17)

இந்த சாட்சியை கருத்தோடு வாசித்த உங்களுக்கு அன்பின்

அருமை இரட்சகர் இயசுவுக்கு உங்களை ஒப்புக் கொடுப்பதற்கு அனுகூலமான மற்றொரு பிரசங்கம் தேவையே இல்லை. திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ (இயேசுவாகிய நானோ) அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது.

சாத்தான் உங்களைப் பகைக்கின்றான். உங்களுக்கு விரோதமாய் பற்பலவிதமான உபாய தந்திரங்களைக் கையாண்டு உங்களைத் தன்னுடன் நரக பாதாளத்துக்கு இழுத்துச் செல்ல அவன் திட்டமாக நினைக்கின்றான். அதைத்தான் இந்த எனது சாட்சியிலே நீங்கள் வாசித்தீர்கள். சாத்தான் உங்களுக்கு ஒரு வாக்குறுதியோ அல்லது ஒரு வெகுமதியோ கொடுக்கின்றான் என்றால் அது ஒரு தீய நோக்கத்திற்காகவே தவிர வேறொன்றுக்கும் அல்ல. சாத்தான் ஒரு முதல் தரமான பொய்யன். உலகத்திலுள்ள பொய்களுக்கெல்லாம் தந்தை அவன்தான். தேவன் அவனை உங்கள் சத்துரு என்று அழைத்தார். அப்படியானால், ஏன் அந்த ஆண்டவருடைய வார்த்தைகளை நீங்கள் நம்பக்கூடாது? அதில் ஏன் இன்னும் தயக்கம்?

இந்த சாட்சியை நீங்கள் ஏதோ தற்செயலாக படிக்கவில்லை. இதை வாசிக்கும் ஒரு பொன்னான வாய்ப்பை தேவனுடைய காயப்பட்ட கரங்களிலிருந்து நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கின்றீர்களா? என்பதை நன்கு நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். வெறுமனே ஆலய கிறிஸ்தவர்களாகவும், கர்த்தர் இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுத்து மறுபடியும் பிறவாதவர்களாகவும் இருப்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்து கொள்ளுகிறீர்கள் இவ்வுலக வாழ்க்கையில் மகா முக்கியமான ஒரு தீர்மானம் எடுப்பதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்வீர்களானால் தோல்வியை பெறுவீர்கள் என்பதை திட்டமாக மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

நான் உங்களைக் கெஞ்சிக்கேட்கின்றேன். நீங்கள் உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள். நீங்கள் கிறிஸ்து இயேசுவில் இருக்கின்றீர்களா ? அவர் தமது பரிசுத்த மக்களுக்காக ஆயத்தம் செய்து வைத்துள்ள மோட்சத்தை சுதந்தரித்துக் கொள்ளுவீர்களா ? மரணம் வந்தால் மகிழ்ச்சியோடு சந்திக்க ஆயத்தம் தானா ? இன்றே, இந்நிமிஷமே அதற்கான தீர்மானம் எடுங்கள். அதற்கான தேவ கிருபைகளை ஆண்டவர் இயேசு தாமே உங்களுக்குத் தந்தருள்வாராக. ஆமென்.

நன்றி தேவ எக்காளம்

(மொழி பெயர்ப்பு)

Taken from the Book "DELIVERED FROM THE POWER OF DARKNESS"

இப்புத்தகத்தை யாவரும் படித்தறிந்து பயனடைய செய்ய வேண்டும் என்பது எமது ஆவல். ஆகவே இப்புத்தகத்தை பெருமளவில் அச்சடித்து வினியோகிக்க நன்கொடைகள், காணிக்கைகள் தேவை. தேவனால் ஏவப்பட்டவர்கள் இதற்காக உதவி செய்யலாம், உதவி செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். புஸ்தகம் தேவைப் படுபவர்கள் இம்முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு முகவரி

பாஸ்டர் Y.K.P. ஹென்றி

[தேவ தரிசன ஊழியங்கள்]

14, அகஸ்தியர் தெரு, பாளையங்கோட்டை,

திருநெல்வேலி - 627002 போன் : 0462 2560124

எங்களது ஊழியங்கள்

- வரைபடம் மூலம் தேவ செய்தி.
- புது பெலன் பத்திரிகை.
- ஆவிக்குரிய புத்தகங்கள்.
- ஒலி, ஒளி நாடாக்கள்.
- சபைகள் இல்லாத கிராமங்களில் சபைகள் நிறுவுதல்.
- மேற்கண்ட எமது ஊழியங்களுக்காக ஜெபியுங்கள், தாங்குங்கள்.
- 24 மணிநேர ஜெபத்தை எல்லா சபைகளிலும் நடப்பிக்க ஊக்குவித்தல்.
- ஊழியர் ஐக்கிய உபவாச ஜெபக்கூட்டங்கள் ஏற்படுத்துதல்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

தேவதரிசன ஊழியங்கள்

#14, அகஸ்தியர் தெரு, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி. தென் இந்தியா

☎ : 0091 (0462) 2560124

மேனகா பிரிண்டிங் தி.நகர், திலி–11. செல்: 94429 72782